
விலை - 30/= பக்கங்கள் - 24




அறிமுகவிலை 20/=

இழந்து போனவனுக்கு வாழ்க்கை துயரம்
எழுந்து நடப்பவனுக்கு எல்லாமே மதுரம்
துயரம் அழுவதற்காக அல்ல...
எழுவதற்காக!!
கோடி பனைகள் நிமிர்ந்த தேசமிது.
குலையாதெம் மனவுறுதியென
வடலிகளும் வரிசை கொள்க.

- புதுவை இரத்தினதுரை

புதுமை : 01 | 18 ஜூன் 2016 | விதி : 01



முல்லைத்தீவில் திமிங்கிலப்புதையல்
பக்கம் - 04

சாதனைபுரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
பக்கம் - 18

பேணிப்பந்து
பக்கம் - 11

# ஆனையிறவு

## போர்முக அடையாளமா?

...2009 இற்குப் பிறகு கதை மாறியது. இந்தப் படைத்தளத்தில் ஒரு பிரமாண்டமான வெற்றிச் சின்னத்தை இலங்கை அரசு நிர்மாணித்தது. கேசரியால் ஓட்டிச்செல்லப்பட்ட ராங்கியின் உள்ளே குண்டினை வெடிக்கவைத்துச் சாவடைந்த லெப்ரினன்ற் காமினி என்ற சிங்களச் சிப்பாயின் நினைவுச் சின்னமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்ப்பதற்காக தினம் ஏராளமான தென்னிலங்கைவாசிகள் வந்து கூடுகிறார்கள். வெளிநாட்டுக்காரர்களும் வருகிறார்கள். எல்லோரும் தாராளமாகப் படங்களை எடுக்கிறார்கள். எதையெல்லாமோ பேசுகிறார்கள்.

ஆனால், அங்கே ஒரு பிரமாண்டமான புகையிரத நிலையம் கட்டப்பட்டுள்ளது. ஆட்களில்லாத இடத்தில் இத்தனை பெரிய புகைவண்டித்தரிப்பிடம் எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம். உங்கள் கேள்விக்குப் பதில் இல்லை.

விரிவான கட்டுரை 3 ஆம் பக்கத்தில்...

'யாதும் ஊரே! யாவரும் கேளீர்!!'

# முல்லைத்தீவில் திமிங்கிலப் புதையல்


செம்மலையில் கரையொதுங்கிய திமிங்கிலம்

**11.06.2016**

இருள் மண்டிக்கிடக்கும் முல்லைத்தீவு தூண்டாய் கடற்கரையில் நாலைந்து உருவங்கள் - மிக ரகசியமாக - நகர்ந்து கொண்டிருந்தன. அந்த உருவங்களின் கண்கள் கடற்கரை மணலில் எதையோ தேடி அலைந்தன.

சில நிமிடத்தேடலுக்குப் பின்னர் அந்த உருவங்களில் ஒன்று, ஒரு இடத்தை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டியதுதான் தாமதம், மற்றைய உருவங்கள் "மள மள" வெனக் காரியத்தில் குதித்தன. கைகளில் இருந்த கருவிகளால் மணலை அப்புறப்படுத்தி அதற்குள் புதைந்து கிடக்கும் "பொருளை" மீட்க வேண்டுமென்ற வெறி அவர்களின் கண்களில். அந்த இருட்டையும் மீறி பளிச்சிட்டது. நேரம் கரைந்து கொண்டிருக்க, பள்ளத்தில் "அது" தென்பட்டது. அக்கம் பக்கமாக கண்களால் நோட்டமிட்டுக் கொண்டே, உள்ளிருந்த "பொருளை" மிகுந்த சிரமத்தோடு வெளியில் கொண்டுவந்தார்கள். அது ஒரு இறந்து போன திமிங்கிலம்.

புதைக்கப்பட்டு பல நாட்கள் ஆகியிருந்ததால், அதனுடல் அழுகி, நாற்றம் குடலைப் பிடுங்கியது. எல்லோரும் துணிகளால் நாசியைச் சுற்றிக் கட்டி விட்டு, இறந்த திமிங்கிலத்துக்குள் புதையலைத் தேடத் தொடங்கினார்கள். ஆனாலும் அவர்களின் போதாத காலம். தற்செயலாக கடற்கரைக்கு வந்த சிலருக்கு இவர்களின் நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்த, அடுத்த சில நிமிடங்களில் பொலிஸார் அந்தக் கடற்கரையில் குதித்தனர்.



திமிங்கிலப் புதையல் தோண்டியவர்கள்கைது செய்யப்பட்டு, உரிய முறையில் விசாரிக்கப்பட்ட போது அவர்கள் ஏற்கனவே செம்மலையிலும் இது போன்று திமிங்கிலப் புதையல் தோண்டி, ருசி கண்டவர்கள் என்ற உண்மை வெளிவந்தது.

அதென்ன திமிங்கிலப் புதையல்? இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று யானையைத்தான் சொல்வார்கள். ஆனால் திமிங்கிலத்துக்கு கூட இந்தப்பதம் மிக நன்றாகவே பொருந்தும். திமிங்கிலங்கள் பெரும்பாலும் கரைக்கு வருவது கிடையாது. நடுக்கடல் ராஜாக்கள் அவை. அத்தோடு அவற்றை நடுக்கடலில் வேட்டையாடுதல் என்பதும் சாதாரண விடயமல்ல. உயிரைப் பணயம் வைத்தே திமிங்கில வேட்டையில் இறங்க வேண்டும். அப்படி இறங்கினாலும் கூட வெற்றி கிடைக்கும் என்பது நிச்சயமல்ல. எனவே சில வேளைகளில் இயற்கையாகவே உயிரிழந்த திமிங்கிலங்கள் கரையொதுங்கினால், அது ஒரு பெரிய பொக்கிஷம் தான். ஏனெனில் "ஆம்பல்" என்ற பொருள் திமிங்கிலத்தின் இரைப்பைக்குள் பதுங்கி இருக்கிறது.

ஆம்பல் என்றால் எங்களுக்கு தெரிந்தவரையில் அது தாமரைபோன்ற நீர்த்தாவரத்தைக் குறிக்கும் ஒரு சொல்தான். ஆனால் அது விலைமதிப்பில்லாத இன்னொரு பொருளையும் சுட்டி நிற்பது நம்மில் பலருக்கும் தெரியாது. (சில வேளைகளில் திமிங்கிலத்தின் இரைப்பைக்குள் பதுங்கியிருக்கும் பெறுமதியான பொருளை மற்றையவர்கள் அறியா வண்ணம் உணர்த்துவதற்கான ஒரு குழுவினரிடம் புழக்கத்தில் இருக்கும் சங்கேதச் சொல்லில் இருந்தும் இந்த "ஆம்பல்" என்ற சொல் பிறந்திருக்கலாம்.) ஆம்பல் என்பது உண்மையில் திங்கிலத்தின் உடல் உறுப்பு அல்ல. இரைப்பைக்குள் செமிக்காமல் இருக்கும் துணிக்கைகள், காலப்போக்கில் வேதியல் மாற்றங்களால் இப்படி "ஆம்பல்" என்ற பொருளாக மாறுகின்றன.

கடற்பாசிகளின் சமிபாடடையாத பகுதிகளே திமிங்கில இரைப்பைக்குள் ஆம்பலாக மாறுவதாக ஒரு பகுதியினரும், இல்லையில்லை, அரியசில கடற்பறவைகளின் எச்சங்களே திமிங்கிலத்தின் இரைப்பைக்குள் ஆம்பலாக உருமாற்றமடைவதாக இன்னொருசாராரும் சொல்கிறார்கள். ஆனால் எவருக்கும் அது பற்றிய சரியான தெளிவில்லை. ஆனாலும் ஆம்பலை எடுத்தால் நல்ல விலைக்கு விற்கலாம் என்பதில் எல்லோரும் மிகத் தெளிவாகவே இருக்கிறார்கள். 100 கிராம் ஆம்பல் ஒரு லட்சம் ரூபா வரையில் ரகசியமாக விற்கப்படுகிறதாம். ஒரு லட்சம் ரூபாவுக்கு 100 கிராமை வாங்குமளவுக்கு அதில் என்ன இருக்கிறது என்று சிலர் கேட்கலாம்.இருக்கிறது. ஆம்பல் ஒரு அரிய ஆண்மை நிவர்த்தி மருந்துப் பொருளாக உபயோகிக்கப்படுகிறது. "வயாக்கரா" மாத்திரையை விடவும் 100 மடங்கு வீரியம் கொண்டது. இப்போது விளங்கியிருக்குமே ஏன் அது யானை விலை, குதிரை விலைக்கு போகிறது என்று. குங்கிலியம் போல நெருப்புத் தணலில் ஆம்பலை போட்டால் அதிலிருந்து எழும்புகை காற்றின் எதிர்த்திசையில் பயணிக்கும் என்று செம்மலையைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கூறுகிறார்.

ஆம்பலிலும் மூன்று வகைகள் உண்டு. கஸ்தூரி ஆம்பல், பொன் ஆம்பல், மீன் ஆம்பல் என்று அவற்றின் தரத்துக்கு ஏற்ப வகைப்படுகின்றன. பெரும்பாலும் திமிங்கிலத்துக்குள் கஸ்தூரி ஆம்பலே ஒளிந்திருக்கிறது. அண்மையில் செம்மலையில் சிதிலமடைந்த நிலையில் கரையொதுங்கிய திமிங்கிலத்தில் கிட்டத்தட்ட 5 கிலோவுக்கும் அதிகமான கஸ்தூரி ஆம்பல் எடுக்கப்பட்டிருக்கலாம் என பிரதேசவாசிகள் கூறுகின்றனர். அப்படியாயின் 100 கிராம் 1 லட்சம் வீதம் ஆகக் குறைந்தது 50 லட்சம் ரூபாவை இனந்தெரியாதவர்கள் ஒரே இரவில் அள்ளியெடுத்திருக்கிறார்கள். உயிரிழந்த நிலையில் கரையொதுங்கும் திமிங்கிலங்களில் உடனடியாக ஆம்பலை மீட்கமுடியாது. அதனால் அதனுடல் அழுகும் வரை காத்திருக்க வேண்டும். எல்லா உறுப்புகளும் அழுகிய பின் உடலுக்குள் ஆம்பல் மட்டும் அசையாமல் அப்படியே இருக்கும். அதனால் இலகுவாக இனங்கண்டு, 'லபக்'கலாம்.

எங்களுடைய கடற்கரைகள் அதிகமதிகம் மனித உடலங்கள் கரையொதுங்குவதையே கண்டிருக்கின்றன. எப்போதாவது அபூர்வமாகவே இத்தகைய திமிங்கிலக் கரை யொதுங்குதல்கள் நடக்கின்றன. இனிமேல் ஆம்பல் என்ற புதையலுக்காக - இப்படியான திமிங்கிலங்களின் கரை யொதுங்கலுக்காக - பலரும் பிரார்த்திக்கப் போகிறார்கள். செத்தாலும் திமிங்கிலங்களுக்கு நிம்மதி கிடைக்காது போலும்.


செம்மலையில் திமிங்கிலம் புதைக்கப்பட்டிருந்த இடம்

அரவான்

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## சட்டியா? அடுப்பா?

தமிழ் ஊடகப்பரப்பில் புதிய பிரசவிப்பான புதுவிதி இப்போது உங்களது கரங்களில். தமிழ் - முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவும் சமூக பண்பாட்டு அசைவியக்கத்துக்கு உந்துதலாகவும் புதுவிதி உறு துணையாக இருக்கும். தற்போது இலங்கையில் நிலவுகின்ற மெல்லிய ஜனநாயக இடைவெளிக்குள், ஒரு பொறுப்பான ஊடகத்துக்கு உண்டான கடமையை புதுவிதி செவ்வனே ஆற்ற வாசகர்களின் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

இப்போது இலங்கையில் ஒரு ஜனநாயகச் சூழல் ஏற்பட்டுவிட்டதான தோற்றம் ஒன்று கட்டியமைக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சியைவிடவும், இப்போதைய நல்லாட்சியில் மெல்லிய பாதையொன்று ஜனநாயகத்தின் பயணத்துக்காக உருவாகி இருப்பது என்னவோ உண்மைதான். ஆயினும் அந்தப் பாதையின் நிச்சயத்தன்மை குறித்த கேள்விகளும் எழாமல் இல்லை.

தமிழர்களின் போராட்டத்தை வேரோடு பிடுங்கியெறிய வல்லாதிக்க சக்திகளுக்கு ஒரு மகிந்த ராஜபக்ஷ தேவைப்பட்டார். அதன் பின்னர் போர் தந்த பாவங்களை கழுவுவதற்கு மைத்திரி என்ற இன்னொரு முகம் அதே வல்லாதிக்கத்திற்கு தேவைப்பட்டது. எனவே மகிந்தவை கறிவேப்பிலையாக தூக்கியெறிந்துவிட்டு மைத்திரியை தலைமேல் வைத்து தென்னிலங்கை கொண்டாடும் நிலைமையை திட்டமிட்டவாறு ஆதிக்க சக்திகள் ஏற்படுத்திவிட்டன.

ஆகமொத்தத்தில் நமது ஆட்சியாளர்களின் வெளித்தோற்றம் மட்டும்தான் மாறியுள்ளதே தவிர உள்ளடக்கத்தில் எந்த மாற்றமுமில்லை. கொழுக்கட்டைக்குப் பதிலாக மோதகம்தான்.

இந்த நிலையில் மைத்திரியுடனான தேனிலவும் ஆதிக்க சக்திகளுக்கு கசக்கத் தொடங்கிவிட்டது போலும். ஏனெனில் இலங்கையில் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சம்பவங்கள் நல்லாட்சிக்கு எதிரான மனோநிலையை மக்களிடையே உண்டாக்கத் தொடங்கியுள்ளது. மின்மாற்றிவெடிப்புகள், விலைவாசி உயர்வு, அதிகரிக்கும் துப்பாக்கிச்சூட்டுக் கொலைகள், தற்கொலை அங்கி மீட்பு, கொஸ்கம ஆயுதக்களஞ்சிய வெடிப்பு என்பனவெல்லாம் திட்டமிட்ட ரீதியில் ஆட்சிக்கு உலைவைக்கும் காரியங்களாகவே நடந்தேறுகின்றன. இத்தகைய உலைவைப்புகளின் பின்னர் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதியாகும் தன்னுடைய ஆசையை வெளியிட்டுள்ளார்.

எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்க்கும் போது மைத்திரியைத் தூக்கியெறிந்து விட்டு மீண்டும் ராஜபக்ஷ குடும்பத்திடம் ஆட்சியைக் கொடுப்பதற்கான தயார்ப்படுத்தல்கள் நிகழ்வதாகவே சந்தேகப்படவேண்டியுள்ளது. ஆனாலும் திட்டமிட்ட ரீதியில் மக்களின் மனங்களை வலிந்து திசை திருப்பும் செயற்பாடுகளுக்கு பலியாகாமல் விழிப்புடன் இருக்கும் பட்சத்திலேயே இலங்கையில் உண்டாகியிருக்கின்ற மிகச் சிறிய ஜனநாயக வெளியையாவது காப்பாற்ற முடியும். அல்லாதுவிட்டால் இன்னொருமுறை சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழும் நிலையைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளீர்!!'

# ஆனையிறவு
## போர்முக அடையாளமா?

■ றெஜினோல்ட்



### 01

ஆனையிறவு என்றால் யாழ்ப்பாணக்குடாநாட்டையும் வன்னியையும் பிரிக்கும் கடல்நீரேரி, போர்த்துக்கீசரின் கோட்டை, இலங்கையின் மிகப் பெரிய உப்பளம், சுற்றுலாப் பயணிகளுக்கான உல்லாச விடுதி, சட்டவிரோதப்பொருட்களைச் சோதனையிடும் சாவடி, இயக்கங்களின் காலத்தில் தடை முகாம், பிறகு இராணுவத்தளம், விடுதலைப்புலிகளின் வீரம் செறிந்த தாக்குதல்கள், சிங்கக் கொடிக்குப் பதிலாகப் புலிக்கொடி, பிறகு படையினரின் வெற்றிச் சின்னம், அதைப்பராமரிக்கவும் பார்க்கவும் எனக் கூடும் சிங்களத்தரப்பு என்று ஒரு நீண்ட பெரும் வரலாற்றோட்டத்தின் நினைவாகப் படரும்.

வரலாற்றின் ஓட்டத்தில் இப்படி என்னவெல்லாமோ மாறியிருக்கின்றன - மாறிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் மாறாதிருப்பது இங்கே வலசை வரும் பறவைகள். (Humming Birds) என்று சொல்லப்படும் செங்கால் நாரைகள், கூழைக்கிடாக்கள் இந்தக் கடல்நீரேரியில் விருந்தாளிகளாக வந்து நெடுநாட்கள் கொண்டாடுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இளவேனில் காலத்தில் கடனீரேரியை அழகாக்குகின்றன இந்தப் பறவைகள். கூடவே நம்மையும் மகிழ்விக்கும். போரோ சமாதானமோ எதுவும் இவற்றைத் தீண்டுவதில்லை.

1985 இல் கைது செய்யப்பட்டு இங்கேயிருந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது நான் பார்த்த அதே செங்கால் நாரைகள் இன்றும் அதே பாடல்களோடு.

ஆனால்... நாம் நமது காலம்...?

### 02

வரலாற்றுக்காலத்தில் இந்தக் களப்பின் வழியாக யானைகள் வன்னிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக் காட்டுப்பகுதிகளுக்குமிடையில் பயணித்ததாகச் சொல்லப்படுவதுண்டு. அப்படிப் பயணிக்கும் யானைகள் களப்புச் சேற்றில் சிக்கி இறந்ததாலேயே ஆனையிறவு என்ற காரணப்பெயர் இந்த இடத்துக்கு உண்டானதென்பது ஐதீகம்.

வன்னியில் பிடிக்கும் யானைகளை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லும் பாதையாக இந்தக் களப்பு வழியே இருந்தது. யானைகள் மட்டுமல்லாமல் வன்னியின் பிற வணிகப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்தின் பொருட்களை வன்னிக்கும் எடுத்துச் செல்லவும் இந்த வழி பயன்பட்டது என்கின்றன வரலாற்றுக் குறிப்புகள்.

எது எப்படியோ 1760 இல் போர்த்துக்கீசர் இங்கே ஒரு கோட்டையைக் கட்டி எழுப்பிய பின்னர் ஆனையிறவின் கதை மாறத்தொடங்கியது. பிறகு அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத்தளமாயிற்று. இந்தக்கோட்டை 1776 இல் டச்சுக்காரரினாலும், பிறகு பிரித்தானியராலும் மீளக் கட்டப்பட்டது. கோட்டையின் தள அமைப்பு ஏறத்தாழச் சதுர வடிவானது. ஒவ்வொரு பக்கங்களும் 50 அடி நீளம் கொண்டவை. கோட்டையின் வடமேற்கு மூலையிலும், தென்கிழக்கு மூலையிலும் இரண்டு கொத்தளங்கள் இருந்தன. கொத்தளங்களின் முகப்பகுதி 30 அடி நீளமானவை. கோட்டைச் சுவர்களில் இருந்து எட்டு அடிகள் முன்தள்ளி உள்ளன. இரண்டு தொடக்கம் இரண்டரை அடிகள் தடிப்புக் கொண்ட கோட்டைச் சுவர்கள் முருகைக்கற்களும் செங்கற்களும் கலந்து கட்டப்பட்டவை. ஏழு அடி உயரமான கோட்டையின் வாயில் கிழக்குப் புறச் சுவரில் அமைந்திருந்தது.

ஆனால், பிரித்தானியர் இந்தக் கோட்டையைப் பிறகு வேறு விதமாக வடிவமைத்தனர். அவர்கள் இதன் ஒரு பகுதியைச் சிறிய ஓய்வு விடுதியாக மாற்றியமைத்தனர். இந்த ஓய்வு விடுதியின் அமைப்புக்காகத் தென்புறச் சுவரும், மேற்குப் புறச் சுவரின் பெரும்பகுதியும் உடைக்கப்பட்டன. கொத்தளச் சுவர்கள் இருந்தவாறே பேணப்பட்டாலும், வட மேற்குக் கொத்தளப் பகுதியில் நிரப்பியிருந்த மண் அகற்றப்பட்டு அப்பகுதியில் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது. இது பிறகு வாடி வீடு என்று சொல்லப்பட்டது.

இந்த வாடி வீடு படை அதிகாரிகளின் இருப் பிடமாகவும் பிறகு வதைகூடமாகவும் மாறியது இன்னொரு கதை.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கத்தில்)



# வாழ்வாதாரமும் வங்கிக்கணக்கும்

வன்னி மைந்தன்



ஏக்கம் சுமந்த முகத்தோடு அந்த முதியவர் காத்துக் கொண்டிருந்தார். போர் அவருக்கு நொண்டிக் கிழவன் என்று பெயரிட்டிருந்தது அவரின் முறை வர அதிகாரி என்ன என்பதுபோல பார்த்தார்.

" ஐயா... எங்களுக்கு இன்னும் வீட்டுத் திட்டம் கிடைக்கேல்லை. இப்ப ஏதோ மலசலகூடம் அமைக்கிற திட்டத்தில் என்ரை பேர் வந்திருக்காம்"

அதிகாரி பட்டியலையும் அந்த முதியவர் கொண்ட வந்த ஆவணங்களையும் நாலைந்து முறை மாறி மாறிப் பார்த்தார். பின்னர் நிமிர்ந்தார்.

"எல்லாம் சரியாயிருக்கு. நீங்கள் போய் **** வங்கியில ஒரு எக்கவுண்ட் திறவுங்கோ காசை அதுக்குப் போடுவம்."

முதியவர் புரியாமல் விழித்தார்.

ஐயா ஏற்கனவே எனக்கு இன்னொரு வங்கியில எக்கவுண்ட் இருக்கு அதுக்கு போடலாம் தானே. ரண்டும் அரசவங்கிதானே.

அதிகாரி கோபத்தோடு பார்த்தார்.

அதெல்லாம் எனக்குத் தெரியும்.

"நீர் நான் சொன்ன வங்கியில எக்கவுண்ட் திறந்தாத்தான் உம்மடை காசை பாஸ்பண்ணுவம்"

சொல்லிவிட்டு வேறுவேலையில் மூழ்கிவிட்டார் அதிகாரி.

பாவம் அந்த முதியவர் இனி வங்கிக் கணக்குத் திறப்பதற்காக பதினாறு கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் வங்கிக்குச் செல்ல இன்னொரு நாளையும் ஐநூறு ரூபா பணத்தையும் வீணாக்க வேண்டும்.

முச்சக்கரவண்டியைத் தள்ளிக்கொண்டே நகர்வதைத்தவிர

வேறென்ன செய்யமுடியும் அவரால்...?

ஈழம், போராட்டம், விடுதலை இப்படியான சொற்கூட்டங்கள் அதிகமாக நம்மிடையே அடிபடுகின்றன. அரசியல், அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பிக்கள்,கட்சித் தொண்டர்கள், ஆதரவாளர்கள், மேலதிகாரிகள், அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் என்பன இந்த சொற்கூட்டங்களுக்குள் அதிகம் கண்டு கொள்ளப்படுகின்றன. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் நடுவில் உழன்று பாடுபடுபவர்கள் பாமர மக்கள் என்ற சொல்லுக்குச் சொந்தமனவர்களை இவர்களில் எவரும் கண்டுகொள்வதில்லை.இவையெல்லாம் புதுக்கதைகளுமில்லை. மக்களுக்கு தெரியாதவையுமில்லை. ஆனாலும் போராட்டம் அதன்பின்னரான தமிழ்மக்களின் வாழ்தலை யாரையேனும் எதிர்பார்ப்பதிலிருந்து ஆரம்பமாகி, தங்கிவாழும் குடும்பப் பாரம்பரியம் வரை வீரியமடைந்து பிணமாகி இறுதி ஊர்வலம் வரை தொடர்கிறது என்பது மறுக்க முடியாததாகி விட்டது.

வடக்கு கிழக்கில் மீள்குடியேற்றத்துக்குப் பின்னரான மக்கள் வாழ்க்கை முறை பாரம்பரிய உழைப்புச் சூழலிலிருந்து மாறுபட்டு, இலகு வழியில் வாழ்தல், சம்பாதித்தல், பிறர் உழைப்பைச் சுரண்டல், பிறர் பங்குபற்றுதலுடன் வாழ்தல், தொண்டு நிறுவனங்களை எதிர் பார்த்தல், சமய நிறுவனங்களின் மதப்போதனைகளைப் பின்பற்றுதல், தழுவுதல் போன்ற தன்னு ழைப்பில்லா வாழ்தலுக்கு மாற்றம் கண்டிருக்கிறது. கையறு நிலையில் தொடங்கிய மக்கள் வாழ்க்கை முறை, தேடிய பொருட்கள் போரோடுபோன மன நிலை, உயிர்ப்பலிகள் இப்படி சொல்ல முடியா இழப்புகளே மக்கள் மனோநிலையை மாற்றியமைத்திருக்கிறது என்றும் சொல்லலாம். இப்படி ஒரு வறுமைசூழ் வாழ்க்கை, போர் முடிந்து ஒரு தசாப்தகாலத்தை எட்டும் தருவாயிலும் தொடர்கிறது- நிலைத் திருக்கிறது. இதனால் இன்னும் மக்கள் மனங்கள் உதவித்திட்டங்களையே நாடி நிற்கின்றன என்பது அபிவிருத்தி, மற்றும் வாழ்வாதாரம் சார்ந்த அமைப்புக்களது சீரான, சீரிய செயற்றிறன் இன்மையையே காட்டி நிற்கிறது.

இந்த அபிவிருத்தித் தோல்விக்கு நடுவில், அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரம் சார்ந்து இயங்கும் அரச, உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பாமர மக்களை படுத்தும் பாடு அபிவிருத்திச் சூத்திரங்களின் அடையாளங்களை அசிங்கப்படுத்துவதாக உள்ளது. அண்மைய நாட்களாக வீட்டுத்திட்ட பயனாளிகளாக இதுவரை உள்ளீர்க்கப்படாத, வறுமைக்குட்பட்ட குடும்பங்களுக்கு மலசல கூட வசதியை அமைத்துக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களை அரச நிறுவனங்கள் மேற்கொண்டுவருகின்றன.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கட்டம் கட்டமாக பணம் வழங்கப்படுகிறது. இது வரவேற்கத்தக்க, வறுமைக்கோட்டுக்குட்டபட்ட மக்களின் சுகாதார வாழ்கையை மேம்படுத்தக்கூடிய திட்ட மாகினும், அதற்காக பயனாளி மக்களிடம் கோரப்படும் ஆவணங்களோ நியாயத்துக் கப்பாற்பட்டதாகிவிடுகிறது. பயனாளிகளோ சாதாரண பாமர மக்கள். அவர்கள் நகரத்தில், வகை வகையான வங்கிக்கணக்குகளைப் பேணி வாழ்பவர்களல்லர். நகரத்தில் இருந்து மக்களின் பணத்தை வாங்கி வைப்பிட்டு, அதறகு "அறா வட்டி" வழங்கும் பல்பரிமாண வங்கிகளுக்கு அப்பால் பல கிலோமீற்றர்கள் தொலைவில் வாழும் இப்படியான கிராமத்து - போர் தின்ற- மக்களுக்கு பணிக்கப்படும் நிபந்தனைதான் அவர்களது வங்கிப்பிரசன்னத்துக்கு காரணமாகவும் அமைகிறது. இதனால் போரால் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட பல குடும்பங்களின் எல்லா வங்கிகளிடத்திலுமான கணக்குத் தொடங்கல்கள் தவிர்க்க முடியாதது.

500 ரூபா முதல் வைப்பிடப்பட்டு தொடங்கப்படும் கணக்கு 25ஆயிரம் - 50 ஆயிரம் என்ற நிலையில் வாழ்வாதார உதவித்திட்ட நிதி வழங்கலுக்குப் பின்னர் உறங்கல் கணக்குகளாகவே **(Sleeping account)** மாறிவிடுகின்றன. குடும்பத்தில் தனித்து வாழும் கணவனை இழந்த, மனைவியை இழந்த நபர்களிடம் கூட்டுக் கணக்கு **(Joint account)** கோருவதும் வேடிக்கை மிகுந்த நிபந்தனைகளில் ஒன்றுதான். நிறுவனத் தலைவர்களே திட்டத்தை நடை முறைப்படுத்தும் போது இவ்வாறான முடிவுகளை எடுக்கின்றனர். தமக்கு செல் வாக்கான வங்கிகளை முதன்மைப்படுத்தவும் செய்கின்றனர். வரும் உதவியை நழுவவிட்டுவிடு வோமோ என்கின்ற பயத்தில் பயனாளிகளும் கீழ் அதிகாரிகளின் நிபந்தனையை மீறுவதில்லை. இப்படித்தான் பல வங்கிகளில் மீதி இல்லா சேமிப்புப் புத்தகங்கள் கணக்குவைக்கப்படுகின்றன.

# செந்நிறத்தின் இன்னொரு முகம்




சோமவன்ச அமரசிங்க இறந்த செய்தியோடு அவரது கடந்தகால அரசியல் நகர்வுகள் பற்றி சில தமிழ் ஊடகங்கள் புகழ்ந்து எழுதி வீரவணக்கம் கூறாத நிலையில் பத்தியை நிறைவுசெய்துள்ளன. ஆனால் மலையகம் உள்ளிட்ட வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்கள் தொடர்பாக அவர் கொண்டிருந்த இன்னோர் முகத்தையும் சுட்டிக்காட்ட மறந்துள்ளன.

மனிதன் ஒருவனின் இறப்பின் தருணங்களில் வைத்து அவனது நல்லது கெட்டதுகளை சந்தைப்படுத்துவது நாகரிகமில்லையாயினும் நாட்டின் முக்கிய நபர் என வருகின்றபோது கூறவேண்டிய விடயங்களை மறைக்காமல் கூறவேண்டியது ஊடகங்களின் தலையாய பண்பாகும்.

தென்னிலங்கையின் முற்போக்கு அரசியல் மாற்றங்களுக்கு சோமவன்சவின் பங்களிப்பென்பது அபரிமிதமானது. காரணம் அவர் தேசப்பற்று எனும் போர்வையில் கொண்டிருந்த தீவிர சிங்கள மேலாதிக்கவாதப் பண்பேயாகும். அமெரிக்க மற்றும் இந்திய எதிர்ப்பாளரான இவர் தமிழரது அரியல் அதிகாரப் பகிர்வு விடயத்தில் என்றைக்குமே ஆதரவு கொடுக்காத கடும்போக்குவாதியாவார்.

> “ஆரம்பம் முதல் முடிவுவரை மலையகம் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களது நியாயமான உரிமைகளை மறுத்து சிங்கள மேலாதிக்கவாதத்தை பறைசாற்றிய பெரியதொரு கறைபடிந்த பக்கம் சோமவன்சவைச் சாரும்.”

மாவோவாதம், சேகுவேராவாதம் என உன்னதமான விடுதலைப் போராட்ட வாதங்களைக் கொண்டதோடு சிங்கள பேரினவாதம் எனும் நச்சுவாதத்தையும் கொண்ட வாதக் கலவையாகத்தான் jvp அறுபதுகளில் உருவானது. இலங்கைத் தமிழர் தொடர்பான jvp இன் நிலைப்பாடானது என்றைக்குமே நியாயபூர்வமானதாக இருந்ததில்லை. நியாயத்தைத் தேடும் அளவிற்கு அக்கட்சி முதிர்ச்சி பெறவும் முடியவில்லை. இந்திய ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம் படை என்றே இலங்கைத் தமிழர்களை அது எதிர்த்து வந்தது. இந்திய விஸ்தரிப்புக்கு எதிரானவர்கள் என கூறிவந்தாலும் மலையகத் தமிழ்மக்களுக்கு எதிரானதாகவே அந்த எதிர்ப்பு நிலையை அது பிரயோகித்தது. மேலும் வடகிழக்கு மாகாணசபை உருவாக்கத்தை நிபந்தனையற்று எதிர்த்ததோடு அதனை வழக்குப்போட்டு பிரிப்பதற்கும் முன்னின்று செயற்பட்டது.

இத்தகைய ஒரு கட்சியின் தலைவரான சோமவன்ச அமரசிங்க 1951 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது உயிர்தப்பிய ஒரேயொரு மத்திய குழு உறுப்பினராதலால் போராட்ட அமைப்பான jvp தொண்ணூறுகளில் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சனநாயக அரசியலுக்குள் நுழைந்தபோது கட்சியின் தலைவராக தெரிவானார். அன்றிலிருந்து ஜே.வி.பியானது பிரதான கட்சிகள் இரண்டோடும் மாறிமாறி சேர்வதும் முரண்பட்டு விலகுவதையுமே இன்று வரை செய்து வருகிறது. இந்தச்சமயங்களில் தமிழ்மக்கள் பிரச்சினை தொடர்பான எந்தவொரு நகர்வுக்கும் தனது தீவிர சிங்கள மேலாதிக்கவாதப் போக்கையே முன்னிறுத்திவந்துள்ளார்.

2005 இல் மஹிந்த தலைமையிலான அரசாங்கத்துக்கு முழு ஆதரவு வழங்கியதோடு பாதுகாப்புப் படையினரின் யுத்த செலவுக்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட இராட்சத நிதியொதுக்கீட்டை மீண்டும் கொடுத்து ஆதரித்தார். மேலும் போர் உக்கிரமாக நடந்து தமிழ்மக்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டபோது 2009 ஏப்ரல் மாத இறுதியில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தளபதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்திருந்தார். அத்துடன் மக்கள் தாராளமாகக் கொல்லப்பட்டுக்கொண்டிருந்த போது யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது என தென்னிலங்கை மேடைகளில் கடுமையாக முழங்கிவந்தார். யுத்தம் நிறைவடைந்து இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை விரிந்தபோது “யுத்தக் குற்றத்துக் காக இராணுவத்திடமிருந்தோ அரசிடமிருந்தோ யாராவது ஐ.நா விசாரணைக் கூண்டுக்கு இழுத்துச் செல்லப்படுவார்களாயின் அது எங்கள் பிணங்களின் மேலாகத்தான் இருக்க முடியும்” என தனது கடும்போக்குவாதத்தைக் கொட்டியிருந்தார். 2011 ஆம் ஆண்டளவில் தமிழ்மக்கள் விரும்பும் பிரிவினைவாத சமஷ்டியைவிட நாட்டை ஒன்றிணைக்கும் சமஷ்டி முறை உருவாக்கப்படவேண்டும் என கருத்துக்களை முன்வைத்திருந்தார். ஆனால் அவரது பாசையில் அதற்குரிய அர்த்தமானது சிங்களப்பௌத்த மேலாதிக்கவாதமாகவே இருந்தது.

சோமவன்ச தலைமையில் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வடக்கு கிழக்கில் பொலிஸ் மற்றும் காணி உரிமைகள் நிலைநாட்டப்படக்கூடாது என்பதற்காக “தேசத்தைக் காக்கும் முற்போக்குப் பிரசாரம்” என்ற பெயரில் பிரசாரங்கள் தீவிரமாக சிங்கள பௌத்த கடும்போக்குவாதிகள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. 2014இல் ஜே.வி.பியின் தலைமைப்பொறுப்பை அனுரகுமார திசாநாயக்கவிடம் கையளித்து பிற்காலத்தில் கட்சியை விட்டு வெளியேறி மக்கள் சேவைக் கட்சி எனும் புதிய அமைப்பைத் தோற்றுவித்தார். கடந்த வருடம் ஒக்டோபர் மாத ஐ.நா தீர்மானத்தைத் தோற்கடிக்க ஏற்கனவே ஜே.வி.பியிலிருந்து விலகிய இனவாதப் போக்காளரான விமல்வீரவன்சவின் JNP கட்சியுடன் இணைந்து செயற்படத்தயார் என பகிரங்கமாக அறிவித்து தமிழ்மக்கள் தொடர்பான கடும்போக்குவாதத்தை மீண்டும் நிலைநாட்டினார்.

இவ்வாறு ஆரம்பம் முதல் முடிவுவரை மலையகம் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களது நியாயமான உரிமைகளை மறுத்து சிங்கள மேலாதிக்கவாதத்தை பறைசாற்றிய பெரியதொரு கறைபடிந்த பக்கம் சோமவன்சவைச் சாரும்.

இலங்கை முற்போக்கு அரசியலில் சோமவன்சவின் பங்களிப்பு தனிச்சிறப்பானது. ஆனால் அது நியாயத்தை குழிதோண்டிப் புதைத்து ஒருபக்கச் சார்பாக இருந்தமையே இறந்தபின்னும் சோமவன்சவை விமர்சிக்கவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

சம்மந்தப்பட்ட தமிழ் ஊடகங்களிடம் கேட்பது என்னவெனில் இப்படியான அரசியல் தலைவர்களது இறப்பைக் காரணம்காட்டி அவர்களது நேர்ப்பக்கத்தை மட்டும் ஆராய்வது எமக்கு பொருத்தமாக அமையாது. எங்கள் புண்பட்ட வரலாற்றை மறைப்பதற்கு இதுவும் துணையாகிவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

■ ஷண்.

# மீளுகைக் கனவுகளுக்கு மூடுவிழா



■ வர்ஷி

"அம்மா, எப்பவம்மா அப்பா வருவார்?"

பல வருடங்களாக மகன் கேட்கும் இந்த ஒற்றைக் கேள்விக்கு அம்மாவிடம் பதில் இல்லை. காணாமல் போன கணவனின் புகைப்படத்தை பார்த்து, விம்மி அழ மட்டுமே அவளால் முடியும். பின்னர் துயர் தோய்ந்த சொற்களைக் கோர்த்து , மகனைப் பார்த்துச் சொல்வாள், "வருவாரப்பு, எப்பிடியும் உன்ர அப்பா வருவார்" சொல்லிவிட்டு உலகத்து தெய்வங்களிடமெல்லாம் தன் கணவரின் உயிர் வாழ்தலுக்காகவும், மீளுகைக்காகவும் அந்தப் பெண் பிரார்த்தனையில் இறங்கிவிடுவாள்.

அவளின் பதிலால் திருப்தியுற்ற மகனும் "எண்டைக்கோ ஒருநாள் அப்பா வருவார்" என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு நகர்வான். ஆனால் இனிமேல் அந்த அற்ப நிம்மதிக்கும் இடமில்லாமல் போய்விடும் என்ற நிலை தோன்றிவிட்டது. காணாமல் போனோருக்கென தனியாக சிறப்புச் சான்றிதழ்களை வழங்க அரசு முடிவு செய்துள்ளதால்.

கடந்த கால போர் நடவடிக்கைகளால் காணா மற்போனவர்களுக்காக அரசாங்கம் சான்றிதழ்களை வழங்க அமைச்சரவையும் தனது அனுமதியை அளித்துள்ளது. கடந்த காலத்தில் குறிப்பாக மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலேயே பெருமளவான தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமற்போயிருந்தனர். யுத்தம் தீவிரமடைந்த நிலையிலும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலும் யாழ். குடாநாடு முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த நிலையிலேயே இவர்கள் காணாமற்போயினர். அதே போன்று இறுதியுத்தம் நிறைவடைந்த நிலையில் பெருமளவு விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பிரான்ஸிஸ் பாதிரியார் தலைமையில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போயினர். இவ்வாறு காணாமற் போனவர்கள் இன்றுவரை உயிருடன் உள்ளார்களா? இல்லையா என்பது எதுவும் தெரியாத நிலையிலேயே கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகவே அவர்களின் உறவினர்கள் தமது போராட்டங்களை பல்வேறு வடிவங்களில் நடாத்தி வருகின்றனர்.

அவர்கள் கேட்பதெல்லாம் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா என்பதைத்தான். தவிரவும் சந்திரிகா வழங்கவுள்ளதாக கூறும் சான்றிதழ்களை அல்ல. காணாமற்போன தமது உறவுகள் உயிருடன் உள்ளனரா? என்பதைத்தான். தமது உறவுகள் எங்கே? எப்போது காணாமற்போயினர் என்ற விபரத்தையும் மிகவும் தெளிவாக பரணகம ஆணைக்குழு உட்பட பல்வேறு இடங்களிலும் கண்ணீரோடு சொல்லிக்களைத்துவிட்டனர். அவர்களிடம் இனியும் அழுவதற்கு கண்ணீர் மிச்சமில்லை. மகிந்தவின் ஆட்சிக்காலத்திலும் போராட்டம் நடத்திக்களைத்த இவர்கள் இன்று நல்லாட்சி அரசு என்று சொல்கின்ற மைத்திரி தலைமையிலான அரசாட்சியிலும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனக்கோரி தமது போராட்டத்தை தொடர்ந்த வண்ணமுள்ளனர்.

உண்மையில் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதனைக் கண்டறிந்து அவர்களின் உறவுகளுக்கு கூறவேண்டியது அரசின் பொறுப்பு. இதற்கு அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் உண்மை கண்டறியப்பட்டு உரியவர்கள் தண்டிக்கப்படுவதுடன் காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கும் அது தொடர்பான விபரத்தை தெரியப்படுத்தவேண்டும். ஆனால் இந்த விசாரணையை ஆரம்பிப்பதற்கு நல்லாட்சி அரசு கூட தயக்கம் காட்டுவது ஏன்? காணாமற்போனோரின் உறவுகள் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்றே கேட்கின்றனர். இதை விடுத்து நாம் சலுகைகளைப் பெற எமக்கு சான்றிதழ் தாருங்கள் என ஒரு போதும் அந்த உறவுகள் கேட்கவில்லை. காணாமற்போனோரின் உறவுகளுக்கு வழங்கப் படும் சான்றிதழ் மூலம் அவர்கள் பிற்காலத்தில் பல்வேறு சலுகைகளைப் பெறலாம் என்று ஆசை காட்டு கிறார். காணாமல் போதல்களுக்கு ஒரு காலத்தில் காரணியாக இருந்த அப்போதைய ராணியான சந்திரிகா. இந்த உறவுகள் காணாமல் போனோருக்கான சான்றிதழைப் பெறவும், பிற்காலத்தில் சலுகைகளைப் பெறவுமா இவ்வளவு காலம் கண்ணீரேந்திகள் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள்.

அப்பட்டமாகவே அனைவருக்கும் தெரியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சூத்திரதாரி யாரென்று. எனவே முன்னைய அரசாங்கம் கூறியதனைப் போல காணாமற்போனவர்களில் பெருமளவானோர் வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்றுவிட்டார்களென முழுப்பூசணியைச் சோற்றில் மறைக்காமல் இந்த அரசாங்கம் பரிகாரம் தேட முயலவேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தைக்கூட அரியணையில் ஏற்றியது தமிழ் மக்கள் தான் என்பதனை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே அரியணையில் ஏற்றிய தமிழ்மக்களின் பாதிப்புகள் குறித்து ஆட்சியாளர்களுக்குத் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. கொஸ்கம - சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக்கிடங்கு வெடித்தவுடன் பிரதமர் சம்பவ இடத்திற்கு செல்கின்றார். அமைச்சர்கள் படையெடுக்கின்றனர். வீடுகளை இழந்த மக்களுக்கு அரச செலவில் வீடுகள் அமைக்கப்படுமெனத் தெரிவித்து அதற்கான வேலைகளும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீடுகள் அமைக்கும் வரையில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு ஐம்பதாயிரம் வழங்கப் படவுள்ளது. வெடித்துச் சிதறிய ஆயுதக் களஞ்சியசாலையையும் வேறிடத்திற்கு மாற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த முப்பது வருடங்களாக இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் தமது உறவுகளை கண்முன்னே இழந்தும் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டும் நிற்கும் தமிழ்மக்களுக்கான தீர்வை வழங்காமல், நல்லாட்சி அரசும் இழுத்தடிப்பு உத்தியையே கைக்கொள்கிறது. அத்துடன் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள காணாமல் போனோருக்கான சான்றிதழ் வழங்க முன்வந்துள்ளமை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் நடவடிக்கையாகவே கருதப்படவேண்டும்.

"வட்டுக்கோட்டைக்கு போகும் வழி எது எனக்கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப்பாக்கு" என்று சொல்வதைப் போல, காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டால் "சான்றிதழ் தருகிறோம்" சலுகை பெற எனக் கூறுகிறது அரசு. இதுதான் அவர்களுக்கான நீதியா? இதற்காகவா காணாமற்போனாரின் உறவுகள் இவ்வளவு காலம் தமது போராட்டங்களை நடத்தினர்? இதற்கு பதில் கூறுவது யார்?

தெற்கில் றகர் விளையாட்டுவீரர் வசீம் தாஜுடீன் கொலை, ஊடகவியலாளர்களான லசந்தவிக்கிரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னலிகொட காணாமற் போகச் செய்யப்பட்டமை தொடர்பாக துரித விசாரணைகளை மேற்கொண்டுவரும் அரசு பல முன்னாள் பொலிஸ் அதிகாரிகளையும் இராணுவ வீரர்களையும் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளது. ஆனால் வடக்கில் இவ்வளவு உறவுகள் (அவர்களும் இலங்கைப்பிரஜைகளே) காணாமற் போயுள்ளனர். அவர்களுக்கு மட்டும் காணாமல் போனோருக்காக சான்றிதழ் வழங்க முன்வந்துள்ளது அரசு. இது எந்த வகையில் நியாயம்?

அரசாங்கம் ஒரு பிழையை தொடர்ந்தும் செய்து கொண்டே வருகிறது. அதாவது பாதிக்கப்பட்டவர்களிடம்தான் வாக்கு மூலங்களை தொடர்ச்சியாக பெற்றுவருகிறது. ஆனால் யாரால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று மக்கள் சுட்டுவிரலை நீட்டுகிறார்களோ, அவர்களிடம் எவ்வித விசாரணைகளையும் நடத்த அரசு தயாராகவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் துயரம் தோய்ந்த முகத்துடன் தமக்கு நடந்த சோகத்தை சொல்வது.

இவர்களை பாதிப்பிற்குள்ளாக்கியவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அவர்களிடம் இது தொடர்பாக இதுவரை எவ்வித விசாரணைகளும் நடத்தப்படவில்லை. யாரின் ஆட்சிக் காலத்தில் இந்தச் சம்பவங்கள் நடந்ததோ அவர்களிடமிருந்து, அவர்களுக்கு கீழ்ப்பட்ட பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து இந்த விசாரணைகள்ள ஆரம்பித்தால் உண்மைகள் தானாகவே வெளிவரும். இதை செய்வதற்கு அரசு தயங்குவதேன்? அவர்களுக்கு தமது இனம் அவர்களை தண்டிக்கக்கூடாது என்ற எண்ணமா? அவ்வாறெனில் காணாமற்போன உறவுளுக்கான தீர்வு வெறும் சான்றிதழ்தானா? இதற்குத்தானா இத்தனை போராட்டங்கள் நடாத்தினோம்?

# நாங்கள் இன்னும் வளரோணும்

> வடக்கின் அல்லது கிழக்கின் எந்த ஒரு பாடசாலை கடைசியாக கிரிக்கெட்டில் தேசிய ரீதியில் கிண்ணம் வென்றது? இது உதைபந்தாட்டத்தில் தலைகீழ். வடக்கிலும் கிழக்கிலும் உதைபந்தாட்டம் என்பது வெறி. தென்னிலங்கை கிரிக்கட்டில் காட்டும் அதே ஆர்வத்தை நம்மாட்கள் உதைபந்தாட்டத்தில் காட்டுகிறார்கள்.

கிஷோகர் ஸ்ரெனிஸ்லஸ்

இலங்கை கிரிக்கட் அணி குறித்து அதன் எதிர்வினையாளர்கள் விசனம் தெரிவிக்கும் விடயம் என்னவென்றால் இலங்கை அணியில் தமிழர்கள் உள்வாங்கப்படுவதில்லை. என்றாலும் இதனை எந்தளவு தூரம் ஏற்றுக்கொள்வது என்பதில் ஆளாளுக்கு அளவுகோல் வேறுபடும்.

பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்க மனநிலை இலங்கை பூராவுமே வியாபித்திருக்கும் போது கிரிக்கட் டில் மட்டும் அது கோலோச்சாமல் இருக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் திமிறிக்கொண்டிருக்கும் திற மையை அவன் சிறுபான்மை இனத்தவன் என்பதால் ஒதுக்கி வைத்துவிடவும் முடிவதில்லை.

முரளிதரன், ரஸல் ஆர்னல்ட், மத்தியூஸ் போன்றோர் இதற்கு நல்ல உதாரணம். அதை ஒரு பக்கம் விட்டுவிடுவோம். என்னைக் கேட் டால் இலங்கை அணியில் ஆடக்கூடிய தகுதியான வீரர்கள் வடக்கிலோ கிழக்கிலோ இல்லை என்றுதான் சொல்வேன்.

சரியான புள்ளிவிபரங்களோடு இவன் இருக்கிறான்டா என்று ஒருவரைக் காட்டுங்கள் பார்க்கலாம்? தயவு செய்து உங்கள் ஊரில் வருடத்துக்கு ஒரு தடவை நடக்கும் இருபதுக்கு இருபது போட்டியில் விளாசித் தள்ளும் ஒருவரை மனதில் வைத்துக்கொண்டு என்னடா சொல்றாய் பன்னாடை.. என்று வர வேண்டாம்.

காரணம் அவசர அவசரமாக மைதானத்தின் ஒரு மூலையில் தார்ப்பாயால் ஒரு கூடாரம் அமைத்து, மூன்று கோப்பைகளை காட்சிக்கு வைத்து நீண்ட பாட்டுக் களின் இடை இடையேஸ்கோர் இப்போது நூற்றி இருபத்து ஆறு. இரண்டு விக்கட் இழப்புக்கு, பதின்ன்று ஓவர்கள் நிறைவில். குமரேசன் மிகச் சிறப்பாக ஆடிக் கொண்டிருக்கிறார். இலங்கை தேசிய அணியில் ஆடும் திறமை இவருக்கு உண்டு என்ற அறிவிப்புக்களோடு நடக்கும் போட்டிகளை போன்றது அல்ல சர்வதேச கிரிக்கட்.

எங்கேனும் தெருவில் ரென்னிஸ் பந்தில் கிரிக்கட் ஆடிவிட்டு பதி னைந்து வயதுக்கு பின்னர் தான் சரா சரியான வடக்கு கிழக்கின் குழந்தைகள் கடினப்பந்து பயிற்சிக்கே போகின்றன. மிகச்சிலரே அதற்கு முன்னரும் ஆரம்பிக்கிறார்கள். ஆனாலும் ஃபோர்வேட் டிஃபன்சிவ்வும், பக் ஃபுட் ட்ரைவும் கொஞ்சம் சாசுவதனமாக அடிக் கத்தொடங்கும் நேரம் சாதாரண தரப்பரீட்சை வந்துவிடுகிறது. நம் தமிழ்ப் பெற்றோரைத்தான் தெரியுமே. உந்த கிரிக்க ட்டா உனக்கு சோறு போடும்? போய் படியடா... ஓயெல் டிஞ்சோடன பிரக்டிஸ் போகலாம் .

சாதாரண தரம் முடிந்து திரும்ப கிரிக்கட்டுக்கு வந்தால் மறுபடி முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது. இதை ஒரு உத ாரணமாகத்தான் சொன்னேன்.



காரணம் நம் தமிழ்ப் பெற்றோருக்கு படிப்புத்தான் எல்லாம். அதன் பின்னர் தான் கிரிக்கெட்டும் வட்டக்கோடும் பாண்டியும் இத்யாதிகளும். அப்படியான சமூகத்தில் இருந்து முரளிதரன்களை எதிர் பார்க்க முடியாதுதானே.

ஆனால் சிங்களவர்களுக்கு அப்படி யல்ல. கிரிக்கட் ஒரு பசன்! ஒரு வெறி. அநேகருக்கு அது ஒரு முதலீடு. காலைக்குளிர் அடங் காத நேரத்தில், வீதியில் இன்னம் பனிமூட்டமாக இருக்கும் நேரத்தில் சுமக்கவே முடியாத பெரும் சுமை தோளில் தொங்க, தனது உயரத்தை விட அதிகமான உயரமு டைய துடுப்பாட்ட மட்டையைச் சுமந்து கொண்டு தாய், தந்தை சகிதம் மைதானத்துக்கு போகும் பையன்கள் தான் தென்னிலங்கையில் அதிகம். அவர்களுக்கு வயது பத்துக்குள் தான் இருக்கும். பிள்ளைகளை பயிற்சிக்கு அனுப்பிவிட்டு ஒரு நாள் பூராவுமே மைதானத்தில் ஓரே மரநிழல்களில் அணி லேற விட்டபடி காத் திருக்கும் பெற்றோர் களை தென்னிலங்கையில் எந்த மைதானத்திலும் காணலாம். கிரிக் கட் தென்னிலங்கை பிள்ளைகளுக்கு

சிறுவயதிலேயே சகல அடிப்படைகளுடனும் விதைக்கப்படுகிறது.


அதனை அந்தப் பிள்ளையின் பெற்றோர் பக்குவமாகப் பராமரிக்கிறார்கள். இது வடக்கில் சுதி சுத்த மாகக் கிடையாது.

தென்னிலங்கையின் வீதிகளில் மாலை நேரங்களில் உடையெங்கும் ஊத்தை தோய, வியர்வை நாற தோளில் தொங்கும் கிரிக்கட் உபகரணப் பைகளோடு அலை யும் பதின்மவயது, இளைஞர்கள் முகத்தில் தெரியும் வெறியை நான் எந்த வடக்கின் இளைஞன் முகத்திலும் கண்டதில்லை. தென்னிலங்கையில் கிரிக்கட் வீரனாக வேண்டும் என்று கனவு காணும் ஒருவ னுக்கு கிரிக்கட் தான் எல்லாம், படிப்பு இரண்டாம் அல்லது மூன்றாம் பட்சம் தான். அவனுக்கு வீட்டில் கிடைக்கும் ஒத்துழைப்பை, வடக்கின் ஒரு இளைஞன் சிந்தித்தே பார்க்க முடியாத ஒன்று. கிரிக்கட் போட்டிகளுக்காக முக்கியமான பரீட்சைகளையே தூக்கிப்போட்ட அநேக தென்னிலங்கை ஆட்களை எனக்குத் தெரியும்.

சரி.. மேற்சொன்ன எதனையும் ஏற்றுக் கொள்ள டியவில்லையா?

இல்லை.... நம்மவர்கள் சோடை போனவர்கள் இல்லை. ஒதுக்கப்படுகிறார்கள் என்கிறீர்களா? சின்னதாக ஒரு உதாரணம். ஒவ்வொரு வருடமும் அரசாங்கம் பாடசா லைகளுக்கிடையிலான கிரிக்கட் போட் டிகளை நிடத்துகிறது. அது கோட்டம், வல யம், மாவட்டம் , மாகாணம், தேசியம் என்று படிப்படியாக போகிறது.

வடக்கையோ, கிழக்கையோ பிரதிநிதித்து வப்படுத்தி தேசிய ரீதியிலான போட்டிக்கு வரும் தமிழ் பாடசாலைகளுக்கு என்னாகிறது? எந்த நிலையில் நாம் நமது தேசிய ரீதியிலான போட்டியை முடித்துக்கொள்கிறோம்? வடக்கின் அல்லது கிழக்கின் எந்த ஒரு பாடசா லை கடைசியாக கிரிக் கட்டில் தேசிய ரீதியில் கிண்ணம் வென்றது?



இது உதைபந்தாட்டத்தில் தலைகீழ். வடக்கிலும் கிழக்கிலும் உதைபந்தாட்டம் என்பது வெறி. தென்னிலங்கை கிரிக்கட்டில் காட்டும் அதே ஆர்வத்தை நம்மாட்கள் உதை பந்தாட்டத்தில் காட்டுகிறார்கள். விளைவு தேசிய ரீதியிலான போட்டிகளில் தென்னி லங்கையின் எந்தப் பிரபலமான பாடசாலைக்கும் வடக்கின் அல்லது கிழக்கின் பாடசாலைகள் சர்வ சாதாரணமாக அடித்து அனுப்புகிறார்கள். தேசிய ரீதியிலான உதை பந்தாட்டப் போட்டிகளில் தென்னி லங்கைப் பாடசாலைகள் கிண்ணம் வெல்வது அரிது. முழுக்க வடக்கு கிழக்கின் ஆதிக்கமே இருக்கிறது. இலங்கைத் தேசிய உதை பந்தாட்ட அணியில் இப் போது அரைவா சிக்கும் அதிகமானோர் தமிழ் பேசுபவர் கள். எனது ஊரில் இருந்தே மூவர் இருக் கிறார்கள். ஆக ஒரு விளையாட்டுக்கு நாம் காட்டும் முனைப்பும் அர்ப் பணிப்பும் தான் நம்மை உச்சிக்கு கொண்டு செல் கிறது. பிரதேச வாதம், மொழி எல்லாம் கடந்து இந்த உண் மைகளை ஜீரணித்து தான் ஆகவேண்டும். நாங்களும் இருக்கிறோம், எங்களுக்கும் அணியில் இடம் வேண்டும் என்று கோட்டா முறையில் கேட்க இது ஒன்றும் பிரதேசவாரி றைமையில் நடக்கும் பாரா ளுமன்ற தேர்தல் கிடையாது. விளையாட்டு!

இலங்கை அணியில் தமிழர்கள் ஆடவேண்டும் என்று எனக்கும் ஆசை தான். ஆனால் தென்னிலங்கை இளைஞர்களின் கிரிக்கட் வெறி நம்மவர்களிடம் இல்லை.

வடக்கும் கிழக்கும் தென்னிலங்கையின் திறமையோடு ஒப்பிடும் போது எங்கோ தூரத்தில் நிற்கிறது. நாம் முன் னேற எவ்வளவோ தூர முண்டு!

அப்படியே கைவிடுகின்ற அரசியல் சித்து



‘மழையைக் காணாது வறண்டு போன வயல்வெளி எதிரே புழுதியாக விரிந்தது. தூரத்து அணைக்கட்டுக்கு அருகில் வெண்ணிறமான தூபியொன்று முளைத்திருந்தது.’

# நிலா

- உடுவில் அரவிந்தன்

நிலாவைக் காணவேண்டும். கிளிநொச்சிக்கு நியமனம் கிடைத்த நாளிலிருந்து இந்த எண்ணம் இடைக்கிடை எனக்குள் தோன்றுகின்றது. ஐந்து வருடங்கள் வெளிமாவட்டத்தில் வேலை செய்ய வேண்டும் என்பது பெரும்பா லான அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக் கட்டாயமாக் கப்பட்டிருக்கிறது. இத்தகைய சட்டதிட்டங்கள் ஒரு புறமிருந்தாலும், வன்னிப்பிரதேசம் ஏற்கனவே அறிமுகமானது என்பதால் என்னால் மனத்திருப்தியுடன் வேலைசெய்யமுடிகின்றது.

ஒவ்வொருநாளும் பஸ் பிரயாணங்களிலேயே என்னுடைய பெரும்பாலான பொழுதுகள் கடந்து விடுகின்றன. வட்டுக்கோட்டையிலிருந்து காலை ஆறுமணிக்குப் புறப்பட்டால் திரும்பி வீடு செல்லும் போது இரவாகிவிடுகின்றது. கிளிநொச்சியில் பாதுகாப் பாகத்தங்கிநிற்பதற்கு ஏற்ற இடமும் எனக்குக் கிடைக் கவில்லை.

இத்தனை நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நிலா வின் வீட்டைத் தேடிச்செல்வதற்கு நேரம் ஒதுக்குவதென்பது மிகவும் சிரமமானது. போரின் சுமைகளுக்குள் மூழ்கிப் போன என்னுடைய மனதுக்கு அவளுடன் பழகிய சிலநாள்கள் இதமான ஒத்தடமாக இருந்ததை மறக்க முடியவில்லை. ஆழ்மனதின் நுண்ணிய இடுக்குகளில் அடைந்துபோயிருக்கும் பசுமையான பதிவுகளை இலகு வில் அழித்துவிடமுடியாது.

இன்று எப்படியாவது நிலாவைச் சந்தித்துவிட வேண்டும்என்று காலையிலிருந்தேதிட்டமிட்டிருந்தேன். மதிய உணவுக்குப்பின்னர் குறுகியநேர விடுப்புப் பெற்றுக் கொண்டேன். நிலாவைப் பார்த்துவிட்டு நான்கு மணிக்குள் அலுவலகம் திரும்பிவிடவேண்டும் என்பதே எனது நோக்கமாகவிருந்தது.

நண்பனின் மோட்டார் சைக்கிளை இரவலாகப் பெற்றுக்கொண்டு பிரதான வீதியில் ஏறியபோது உச்சி வெயில் நெருப் பாக எரித்துக் கொண் டிருந்தது. கிளிநொச்சி நகரிலிருந்து உருத்தி ரபுரம் செல்லும் வழியில் ஒரு கலவன் பாடசாலைக்கு அருகில் வீடு இருப்பதாக அவளு டைய தாய் சுமதி முன்பு எனகுச் சொல்லியிருந்தாள். அந்தக் குறிப்பை மனதில் வைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளைச் செலுத் தினேன். கடையொன்றில் நிலாவுக்குப் பிரியமான சில பொருள்களை வாங்கிக்கொண்டேன்.

போரின் எச்சங்களை மிகவிரைவாக அகற்றவேண்டும் என்ற தீவிர முனைப்புடன் கிளிநொச்சிநகரம் பிரமாண்ட மாகப் புனரமைக்கப்பட்டுள்ளதாக எனக்குத் தோன்றியது. நகர்ப்புறங்களையும், பிரதான தெருக்களையும் பிரகாசமாக்கி, ஏனைய இடங்களை விளையாட்டுக்கள் முடிவின்றி நீண்டுசெல்கின்றன. இத்தகைய பாரம்பரிய நடனங்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதற்கு இங்கு கடுமையான போட்டி நிலவுவது எமது தலைவிதி யென்றுதான் சொல்லவேண்டும்.

கருமையாகப் பளபளக்கின்ற வீதியில் கனரக வாகனங்களின் அழுத்தமான தடங்கள் காடுகளை நோக்கி இடையிடையே முறிகின்றன. விழுங்குவதற்காகக் காத்திருக்கும் மலைப் பாம்புகளின் திறந்தவாய்களைப் போலவே எனக்கு அவை தென்படுகின்றன.

உருத்திரபுரத்திலுள்ள அந்தப் பாடசாலைக்கு முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். பாடசாலைகளுக்குரிய பிரத்தியேகமான ஆரவாரம் மெல்லிதாகக் கேட்டது. மழையைக் காணாது வறண்டு போன வயல்வெளி எதிரே புழுதியாக விரிந்தது. தூரத்து அணைக்கட்டுக்கு அருகில் வெண்ணிறமான தூபியொன்று முளைத்திருந்தது. நாலைந்து கௌதாரிப் பறவைகள் வயற்புதர்களுக்குள் ஓடித்திரிந்தன.

அருகிலிருந்த சிறியகடையில் நிலாவின் மாமாவின் பெயரைச் சொல்லி விசாரித்தேன்.

“அண்ணை இதிலை கார்வண்ணன் வீட்டுக்கு எப்பிடிப் போறது?”

கடைக்காரர் என்னை ஒருமாதிரிப் பார்த்தார் பிறகு பக்கத்திலுள்ள ஒற்றையடிப் பாதையைக் காட்டினார்.

“இந்த வழியால் கொஞ்சத்தூரம் போனால் அந்த வீட்டிலைதான் முடியும்“

அவருடைய பேச்சில் ஒருவித தயக்கம் ஒட்டியிருப் பதை உணர்ந்துகொண்டேன். நன்றி கூறிவிட்டு மோட் டார் சைக்கிளைத் திருப்பினேன்.

இரண்டுபக்கமும் பற்றைகள் அடர்ந்த பாதை நீண்டு சென்றது. வழியில் வீடுகள் எவையும் தென்படவில்லை. பாதையின் முடிவிடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, தகரப்படலையை நகர்த்தி உள்ளே நுழைந்தேன்.

வளவு முழுவதும் தலைகளற்ற தென்னைமரங்கள் நடுகற்களைப் போல வரிசையாக நின்றன. தரை மட்ட மாகிப்போன கல்வீட்டுக்கருகில் மண்ணால் கட்டப்பட்ட சிறுகுடிசையொன்று தென்பட்டது. அதன் வெளித்திண்ணையில் நிலாவின் தாய் சுமதி அமர்ந்திருப்பது தெரிந்தது. என்னைக் கண்டதும் அவள் எழுந்து நின்றாள்.

குரூரமான யுத்தம் விழுங்கிய சாதாரண மனிதர்களின் நிகழ்காலச் சாட்சியமாக அவள் உருக்குலைந்து போயிருந்தாள். என்னை அடையாளம் கண்டதற்கான அறிகுறிகள் எதுவும் அவளுடைய முகத்தில் தென்படவில்லை.

அக்கா நான் முகுந்தன். தேவிபுரத்திலை சந்திச்சிருக் கிறம். எப்பிடி இருக்கிறீங்கள்?

சம்பிரதாயமான கேள்வி அந்தச் சூழலுக்குப் பொருத்தமற்றதாகவே எனக்குத் தோன்றியது. தற்காலி கத் தங்குமிடங்களில் அறிமுகமாகும் எவரையும் நினைவில் நிறுத்திவைத்திருக்கக்கூடிய அவகாசமற்ற காலப்பகுதியில் நாம் சந்தித்திருந்தோம்.

அவள் என்னைச் சலனமற்றுப் பார்த்தாள்.

நிலா எங்கை அக்கா? ஆவலுடன் வினாவினேன்.

சுமதி என்னைக் கூர்ந்து பார்த்தாள். அவளுக்கருகில் நிலாவின் கரடிப்பொம்மை அழுக்கேறிக் கிழிந்து கிடந்தது.

“அவள் பள்ளிக்கூடத்துக்குப் போட்டாள்””

நான் என்னையே நொந்துகொண்டேன். நிலா பாடசாலைக்குப் போயிருப்பாள் என்ற விடயத்தைத் துப்புரவாக மறந்துவிட்டேன்.

‘நிலா இப்போது ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருப்பாள். பழைய சுட்டித்தனங்களெல்லாம் குறைந்துபோயிருக்கும். என்னை நினைவில் வைத் திருப்பாளா?சு

“நிலா வளர்ந்திருப்பாள் என்னக்கா நல்லாப் படிக்கிறாளோ?” என்னுடைய கேள்வி சுமதியைச் சற்று மலர்ச்சியடைய வைத்தது.

‘வகுப்பிலை எப்பவும் அவள்தான் முதலாம்பிள்ளை. மேடையில நிறையப் பரிசுகள் எல்லாம் வாங்குகிறவள்சு மிகுந்த பூரிப்புடன் சொன்னாள். வாழ்வில் அவளுக்குக் கிடைத்த துயரங்களையெல்லாம் நிலாவின் ஒளிர்வு ஒன்றே துடைந்தெறிந்துவிடும் என்ற நம்பிக்கை அதில் தெரிந்தது.

‘உதிலை கொஞ்சநேரம் இருங்கோ. அவள் பள்ளிக்கூடத்தாலை இப்ப வந்திடுவாள்சு என்றவாறு கரடிப்பொம்மையையும் தூக்கிக்கொண்டு சுமதி உள்ளே போய்விட்டாள்.

நான் வெளித்திண்ணையில் அமர்ந்து நிலாவுக்காகக் காத்திருக்கத் தொடங்கினேன்.

எனக்கு நிலாவின் முகம் நன்றாக நினைவிலிருக்கிறது. ஆழ்ந்த உறக்கங்களில் ஏற்படுகின்ற கனவுகளின் சலனமாக அவள் என்னுள்ளே உருப்பெறுவாள். கிட்டத்தட்ட ஆறு வருடங்களுக்கு முன்னரான பெயர்வுக்காலம். வன்னிப்பெருநிலத்தில் விடாமல் துரத்துகின்ற எறிகணைகளிடமிருந்து தப்புவதற்காக மக்கள் ஒவ்வொரு ஊராக ஓடிக்கொண்டிருந்தார்கள். அவ்வாறான அவதிமிக்க நாட்களில் ஒரு பின்மாலைப் பொழுதில் அவளைக் கண்டேன்.

அன்று காலையிலேதான் முரசுமோட்டையிலிருந்து என்னை தேவிபுரத்துக்குக் கொண்டுவந்து சேர்ந்திருந் தார்கள். வலதுகாலைத் துளைத்திருந்த எறிகணைச் சிதறல் என்னை இயல்பாக நடமாடவிடாமல் முடக் கிப் போட்டிருந்தது. தென்னந்தோப்புக்கு நடுவில் அமைக்கப் பட்டிருந்த சின்னஞ்சிறு கூடாரவீடுகளில் ஒன்றில் காயப்பட்ட சிலருடன் தங்கவைக்கப்பட்டிருந்த எனக்குப் பொழுதைக் கழிப்பது நரகவேதனையாக இருந்தது. வெகுதூரத்தில் விட்டுவிட்டுக் கேட்கின்ற வேட்டுச்சத் தங்கள் என்னைப் அலைக்கழித்தன.

எனது கூடாரத்திலிருந்து பார்க்கும்போது சற்றுத் தொலைவில் நாலைந்து சிறுவர்கள் ஒன்றாகக் குழுமியி ருப்பது தெரிந்தது. தூரத்தில் கேட்கின்ற குண்டுச்சத்தங் களைப்பற்றிய அருட்டுணர்வுகள் எதுவுமற்று அந்தச் சிறுவர்கள் தமக்கென்று உருவாக்கிய தனியுலகில் அமிழ்ந்திருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அந்தச் சிறுமி துடிதுடிப்புடன் மின்னினாள்.

எழுச்சி பெற்ற பேரரசொன்றின் வனப்புமிக்க குட்டி இளவரசியைப் போல அந்தச் சிறுமியின் பாவனை அமைந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. அவள் நடுவில் அமர்ந்திருக்க ஏனையோர் மகாமந்திரிகளைப் போலவும், போர்த்தளபதிகளைப் போலவும் சுற்றிவர நின்றிருந்தார்கள்.

கைத்தடியை ஊன்றியவாறு மெதுவாக வெளியே வந்தேன். புதிதாக வெட்டப்பட்ட பதுங்குகுழியை மூடியிருந்த தென்னங்குற்றியில் அமர்ந்து காலை நன்றாக நீட்டிக்கொண்டேன். கால்வலி என்னைக் குடையத் தொடங்கியது. என்னுடைய அசாதாரணமான சலனம் அந்தச் சிறுவர்களைப் பெரிதாகப் பாதிக்காவிட்டாலும் அந்தச் சிறுமி மட்டும் அடிக்கடி திரும்பிப் பார்த்தாள்.

சற்றுநேரத்தின் பின்னர் அவள் எழுந்து என்னை நோக்கித் தயங்கியபடி வந்தாள். அழகான வண்ணத்துப்

டன் அவள் என்முன்னே புன்னகையைச் சிந்தினாள்.

அவளுக்கு ஆறு வயதிருக்கலாம். மண்ணிறமான பெரிய கரடிப்பொம்மையொன்றை நெஞ்சோடு அணைத்துப் பிடித்திருந்தாள். பொம்மைகளுக்கும், குழந்தைகளுக்குமான உறவு கடவுளால் விதிக்கப் பட்டது. அவர்களுடைய உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய உருவங்களாகவே பொம்மைகள் விளங்குகின்றன. பொம்மைகளுடனான உரையாடல் மொழி குழந்தைகளுக்கு மட்டுமே சாத்தியமானது.

வெள்ளைத்துணியால் சுற்றப்பட்டிருந்த என்னுடைய வலதுகாலில் அவளுடைய பார்வை சிக்கியிருந்தது. படபடக்கின்ற அவளுடைய பெரியவிழிகளில் ஏதோவொரு கேள்வி தொக்கிநின்றது.

"உங்கட பேரென்ன?"

முன்னறிமுகமற்ற சூழ்நிலையைச் சமாளிக்கும் நோக்கில் உரையாடலைத் தொடங்கினேன்.

"இளநிலா மாமா. என்னை நிலா எண்டு கூப்பிடுவினம்"

"மாமா....?"

சின்னஞ்சிறு பூவைப்போன்ற ஒரு குழந்தையின் மழலையாக வழிந்த அந்த உறவுச்சொல், இணையற்ற உள்ளக்கிளர்ச்சியை எனக்குள் ஏற்படுத்தியது.

தூய தமிழ்ப்பெயர்களின் இடுகைகள் வலியுறுத்தப் பட்ட எழுச்சிக்காலத்திலே, பிறந்த குழந்தைகள் நிகரற்ற வரலாற்றின் முக்கியமான சாட்சிகளாக விளங்கப்போகிறார்கள் என்பதை உணர்ந்தேன். ஓர் இனத்தின் அடையாளமாகப் பாரம்பரியக் கலைகளையும், பண்பாட்டு அம்சங்களையும் எடுத்துக் காட்டினாலும், ஒருவருடைய பெயர் வெளிப்படுத்து கின்ற படிமம் ஏனைய சகல விடயங்களுக்குமான திறவுகோலாக அமைவதைக் காணலாம்.

"உங்கட அப்பா அம்மா எங்க இருக்கினம்?" நெருக்கமான பிணைப்பு எனக்குள் ஏற்படுத்திய ஆனந்த மலர்ச்சியுடன் அவளிடம் கேட்டேன்.

"அந்த வீட்டிலைதான் மாமா. அம்மாவும், அம்மம்மாவும் மட்டும்தான் இருக்கினம். அப்பா எங்கையோ தூர இடத்துக்குப் போட்டார்"

அவள் நீட்டிய விரலின் வழித்தடத்தில் என்னுடைய பார்வை பயணித்தது. சற்றுத் தொலைவில் முதிராத தென்னைகளின் நடுவே முளைத்திருந்த, அவசரக் கூடாரங்கள் தென்பட்டன. அவற்றில் ஒன்றின் வாசலில் ஓர் இளம்பெண் அமர்ந்திருந்தாள். நிலாவின் தாயாக இருக்கலாம். அவள் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நிலாவின் பார்வை என்னுடைய காலையே வட் டமிட்டுக் கொண்டிருந்தது.

"நீங்களும் சண்டை பிடிச்சனீங்களோ மாமா?" "நான் சண்டை பிடிக்கேல்லை நிலா" இலேசாகப் புன்னகைத்தேன்.

"அப்ப இந்தப் புண் எப்பிடி வந்தது?"

அசாதாரணமான சூழல்கள் ஒருவரை எவ்வளவு முதிர்ச்சியடையச் செய்கின்றன! ஆறேழு வயதின் குழந்தைத் தனத்துக்கு அப்பாலான அவளுடைய தேடல் என்னை ஆச்சரியப்பட வைத்தது.

"நான் வேலை செய்த இடத்திலை குண்டு விழுந்து வெடிச்சது. அதுதான் காயம்பட்டது"

காலைத் தடவியபடி சொன்னேன். நான் சொன்னதை அவள் நம்பியதாகவே தோன்றியது. பாட்டி வடை சுட்ட தொன்மக் கதைகளைக் குழந்தைகள் ஆவலுடன் கேட்ட காலம் கடந்து போய்விட்டதாக நினைத்துக் கொண்டேன்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இறந்துபோன நெருங்கிய நண்பர்களின் நீண்ட அனுபவக் கதைகள் என்னிடம் இருந்தன. என்னுடைய வாழ்க்கை திசை திரும்பிய கணப்பொழுதுகள் குறித்த பதிவுகள் யாருக்குமே சொல்லப்படாத மூடிய பக்கங்களாகவே இருந்தன.

உயிர் வாழ்தல் குறித்த நிச்சயமின்மை யாழ்ப்பாணத் தில் நிலவிய சமாதான காலத்தின் பிற்கூறுகளில் முகமாலையைத் தாண்டி ஒருவாறு வன்னிக்கு வந்து சேர்ந்திருந்தேன். இரவு வேளைகளில் கரும்பச்சை நிறமான உருவங்கள் தந்தியாலான வாத்தியங்களை முழக்கிக் கொண்டு சவப்பெட்டிகளைக் காவியபடி ஊர்வலம் போவதைப்போலத் துயரக்கனவுகள் கண்டு திடுக்கிட்டு விழித்துக்கொள்வேன். வீதிகளெல்லாம் முற்றாக அடங்கிப்போன, கடினமான ஒரு நாளுடன் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டேன். அதற்குப் பின்னரான என் வாழ்வு எவ்விதமான சமரசங்களுமற்றுப் பயணித்தது.

இனிவருகின்ற நாள்களில் நிலாவுடன் எல்லாவற் றையும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

மேற்குப்பக்க அடிவானில் யுத்த விமானங்களின் பேரிரைச்சல் கேட்டது. விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் தங்களுடைய இருப்பிடங்களை நோக்கிச் சிதறினார்கள்.

"கிபிர் வருகுது. அம்மா தேடுவா. நான் போறன் மாமா"

நிலா தன்னுடைய தாயை நோக்கி வேகமாக ஓடினாள். நடப்பவற்றைச் சலனமற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். விமானக்குண்டு வீச்சுக்களும், துப்பாக்கி வேட்டுக்களும், எறிகணைகளும் என்னோடு ஒன்றிப்போனவை. குருதிபீறிடும் காயங்களையும், சாவுகளையும் அடிக்கடி பார்த்துப் பழகியதால் சலன மற்று அமர்ந்திருந்தேன்.

இரண்டு விமானங்கள் அதீத ஒலியுடன் மேகத்திரை யின்பின்னால் மறைந்தபடி விரைந்தன. சிலவினாடிகளில் நிலம் அதிர்ந்து குலுங்கியது. புதுக்குடியிருப்புப் பக்கம் புழுதிப்புகார் மேலெழுந்தது. சரியான இலக்கு கள் குறித்த நியாயமான கவலைகள் அவற்றுக்கு எப்போதுமே இருந்ததில்லை. புராணக்கதைகளில் வருகின்ற கொடூரமான அசுரர்களின் மாயப்பொறிகள் உண்மையிலேயே இருந்திருக் கக்கூடும் என்று நான் சிலவேளைகளில் நினைப்பதுண்டு.

ஓரிரு நாள்களில் அந்தச் சிறுபெண் என்னுடன் நன்றாக ஒட்டிக்கொண்டு விட்டாள். உணவுக்கான அலைதல் மிகுந்த வேளைகளில் எதையாவது மிச்சம் பிடித்து நிலாவுக்காக வைத்திருப்பேன். அவளுடன் இணைபிரியாது காணப்படும் கரடிப்பொம்மையைப் பற்றிக் கேட்டால் மீசைமாமா தந்தது என்று சொல்வாள். எந்த மீசைமாமா என்பதற்கு அவளிடம் தெளிவான பதில் இருக்காது. அந்த மீசைமாமா அவளுடைய தந்தையின் நண்பர்களில் ஒருவனாக இருந்திருக்கக்கூடும்.

அவளுடைய சின்ன உலகத்திலே மீசைமாமாக்கள் மிகுந்த நேசத்துக்குரியவர்களாக வைக்கப்பட்டிருந்தார் கள்.

நிலாவின் தாய் சுமதியுடன் இரண்டொரு தடவை களே உரையாட முடிந்தது. உருத்திரபுரத்திலுள்ள வீட்டில் பொருள்கள் எடுத்துவருவதற்காகச் சென்று திரும்பிவராத தன்னுடைய கணவனைப்பற்றியும், மூன்று வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக் கடலில் சாவடைந்த தன்னுடைய தம்பி கார்வண்ணன் குறித்தும் புலம்புவாள். அவளுடைய ஒரேயொரு பிடிமானம் நிலா மட்டுமே என்பதாக ஆறுதல் சொல்லிக்கொள்வாள்.

தொடர்ந்து வந்த யுத்தநெருக்கடிகளுக்குள் சிக்கி மீண்டும் மீண்டும் தொலைந்துபோனோம். முன்னறிவிப் புடன் வருகின்ற மரணங்களே எமது வாழ்வானது.

அதற்குப்பிறகு நான் நிலாவைச் சந்திக்கவேயில்லை. ஆனாலும், அந்தச் சிறுகுழந்தை ஏற்படுத்திய அதிர் வுகள் அவ்வப்போது என்னுள்ளே எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

போர் முடிவடைந்தபின்னர் தடுப்புமுகாமின் நெருக்கடிக்குள்ளால் ஒருவாறு மீண்டுகொண்டேன். தடைப்பட்டிருந்த என்னுடைய பல்கலைக்கழகக் கல்வியைச் சிரமப்பட்டுப் புர்த்திசெய்தேன். உடனடி யாகவே கிளிநொச்சியிலுள்ள விவ்சாயத் திணைக்கள அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக வேலை கிடைத்தது.

என்னுடைய பார்வை மீண்டும் வாசலை நோக்கி விழுந்து மீள்கின்றது.

"நிலா ஏன் இன்னும் வரவில்லை? பாடசாலை இரண்டுமணிக்கு முடிவடைந்திருக்குமே?"

நேரம் செல்லச் செல்ல என்னுடைய மனம் அவளுடைய வருகையை எதிர்பார்த்துத் தவிக்கத் தொடங்கியது.

குடிசையின் இடப்பக்கமுள்ள பற்றைகளினூடாக விறகுக்கட்டுடன் வயதான பெண் வருவது தெரிந்தது. காவிவந்த சுமைய்ய ஓரமாகப் போட்டுவிட்டுப் பெரு மூச்சு விட்டபடி என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

"தம்பி ஆரைத் தேடுறீங்கள்?"

நெற்றியில் வழிகின்ற வியர்வையைத் துடைத்தவாறு கேட்டாள். இந்தப் பெண்ணை ஏற்கனவே பார்த்த நினைவு. நிலாவின் அம்மம்மாவாக இருக்க வேண்டும்.

"நான் தேவிபுரத்திலை உங்கட கொட்டிலுக்குப் பக்கத்திலை இருந்தனான்...." தயங்கியபடி இழுத்தேன்.

"எனக்கு ஒண்டும் ஞாபகமில்லை. சுமதியோடை கதைச்சனீங்களோ? குடிக்க ஏதாவது தரட்டோ?" எனக்கு ஒண்டும் வேண்டாம் அம்மா. நிலாவைப் பாத்துக் கொண்டு நிக்கிறன். இன்னும் பள்ளிக்கூடத்தாலை வரேல்லை எண்டு சொன்னவ

சில கணங்கள் மௌனமாக இருந்தவள், குடிசையைப் பார்த்தபடி மெல்லச் சொன்னாள்.

"நிலா செத்துப்போச்சுது! தம்பி" நான் அதிர்ந்து போனேன்.

"புதுமாத்தளனிலை இருக்கேக்கை குண்டுவிழுந்து சிதறிப்போச்சுது. உடம்புகூடக் கிடைக்கேல்லை. அதிலையிருந்து சுமதிக்கு மாறாட்டம். நிலாவின்ர பொம்மையைத் தூக்கிக்கொண்டு றோட்டு றோட் டாய்ப் புலம்பித் திரியுது"

அந்த முதியபெண் துவண்டுபோய் நிலத்தில் அமர்ந்துகொண்டாள்.

நிலாவுக்காக நான் வாங்கிவந்த பொருள்கள் திண்ணையில் சரிந்துகிடந்தன. பேச்சற்றுப்போய்த் தளர்ந்த நிலையில் திரும்பி நடந்தேன்.

குடிசையினுள்ளே விசும்பல்கள் தேய்ந்து தேய்ந்து ஒலித்தன.


மெதுவான வேகத்தில் அலுவலகம் திரும்புகிறேன். மனம் இறுகிக் கிடந்தது.

வழியெங்கும் பற்றைகளின்நடுவே வெண்ணிறமான கூடாரங்கள் நிரந்தரமான வறுமையையும், ஆற்ற முடியாத சோகங்களையும் சுமந்தபடி தமக்கான மீட்பர்களை நோக்கித்தவமிருக்கின்றன. அந்தக் கூடாரங் களின் முன்னே அழுக்கேறிய ஆடைகள் அணிந்த சிறுவர்கள் கண்களில் வழியும் ஏக்கங்களுடன் வீதியில் விரைகின்ற வாகனங்களைப் பார்த்தபடி நிற்கிறார்கள்.

எதிர்காலம்பற்றிய நம்பிக்கைகள் தொலைந்துபோன பல கிராமங்களின் புராதனமான புழுதித்தெருக்களில், பெருநகர வணிகர்கள் விதவிதமான பொம்மைகளைக் கூவிக்கூவி விற்கிறார்கள்.

வீதியோரத்துச் சுவர்களில் தேர்தல்கால வண்ணச் சுவரொட்டிகள் ஒப்பனையேறிய முகங்களுடன் மின்னு கின்றன.

வெளியுலகுக்குத் தெரியாத பல்லாயிரம் கதைகளைத் தம்முள்ளே வைத்திருக்கும் தூரத்துப் பெருங்காடுகள் மௌனமாக அழுகின்றன.





# அகதியிடமிருந்து அகதிகளுக்கு

கிரிஷாந்த்

உலகெங்கும் அகதிகளாக வாழும் இனத்திலிருந்து உலகெங்கும் வாழும் அகதிகளுக்கு ஈழத் தமிழர்களின் பக்கத்திலிருந்து ஒரு கண்ணீர்க் கடலை அனுப்புகிறோம்.

'கரண்ட்' கம்பிகளில் தொங்கிச் சாகவும் ஏனென்றே தெரியாமல் அடி வாங்கிக் 'கிடக்கவும்' கடுங்குளிரில் உறையவும் கொடும் வெயிலில் கரையவும் விதிக்கப்பட்ட இனத்திலிருந்து ஒரு குரல்.

அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் சொல்கிறது அகதி என்பவர் யார் என்பதையும், அவர்களின் உரிமைகளையும், புகலிடம் கொடுத்த நாடுகளின் பொறுப்புகளையும் வரையறை செய்த அனைத்துலக உடன்பாடு என்று.

ஆனால் நண்பர்களே! நாங்களோ தொடர்ந்தும் கூடாரங்களிலும் பாடசாலை களிலுமே வாழ்கிறோம். எமது முகாம்களை வீடுகளென்று நம்பச் சொல்கிறார்கள். எப்படி நம்புவோம் நண்பர்களே? எமது தெருக்களை முற்றத்து நிலவை நீண்ட மரங்களை நெடிய வசந்தங்களை இழந்துவிட்டோம் என்பதை எமது ஞாபகங்களில்

**உலக அகதிகள் தினம்**
**யூன் 20**

இருந்து எடுத்துவிடச் சொல்கிறார்கள்.

எமது காயங்களையும் காயங்களின் இரத்தப் பெருக்கையும் கட்டுப்படுத்திக் கொள்ளச் சொல்கிறார்கள். கூடாரத் துளையில் இருளுக்கும் அப்பால் நிலைபெற்றிருக்கும்.

நட்சத்திரங்களை பாருங்கள் நண்பர்களே, நாம் அனைவரும் ஒரே அகதி வானத்தின் கீழ் நட்சத்திரங்களின் ஒளியில் கண்ணீரை விதைத்து விட்டிருக்கிறோம்.

இன்று சிரியக் குழந்தைகளின் பகல்களையும் இரவுகளையும் எங்களது குழந்தைகளும் அறியும். சிரியப் பெண்களின் துயர்வழியும் உடல்களை எங்கள் பெண்களின் இதயங்களால் தொடமுடியும்.



இறந்துபோன செல்லப் பிராணிகளின் அழுகையொலி உங்களைப் பின் தொடருமென்பதை அறிந்து இங்கொரு நாய் இரவைப் பிளக்கும் ஒலியை எழுப்புகிறது.

நண்பர்களே!

உங்களது வீடுகளின் ஜன்னல்கள் திறந்திருக்கின்றன, தெருக்கள் அமைதியை இழந்திருக்கின்றன. இதயங்களோ அச்சத்தில் தறையப்பட்டிருக்கின்றன. உணவுக்காக அழும் குழந்தைக்குப் பக்கத்தில் தாய் இறந்து போயிருக்கிறாள். நீங்கள் இப்பொழுது வாழும் கூடாரங்களுக்கு காற்று வருகிறதோ இல்லையோ இந்த நினைவுகள் நிறைகின்றன என்பதை எங்களால் அலைகளுக்கு அப்பாலும் கேட்க முடிகிறது.

நண்பர்களே, குழந்தைகளே, செல்லப் பிராணிகளே, இந்த அகதிகள் தினத்தில் பூமியில் உள்ள அனைத்து அகதிகளுக்குமாக உலகில் அதிக தேசங்களில் சிதறிப் போயிருக்கும் இனத்தின் குரலாக இந்த மடலை அனுப்புகிறோம்.

**"வீடென்பது நமது சுவர்க்கம். வாழ்வென்பது நமது உரிமை."**

---



# போர்க்குழந்தையொன்றின் ஓவியப்பிரதிகள்

மூன்று தசாப்தம் நீண்ட போருள்ளான வாழ்க்கை எம்முடைய மக்களின் கூட்டுமன நிலையில் போர் தந்த வடுக்களையும் இடைவெளிகளையும் நம் முகத்தில் ஆழமாக பதித்து சென்றதை யாரும் மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு நாளும் நமது கடந்த காலம் மனதினுள் கிடந்து குமைந்து ஏதோ ஒரு உளவியல் சிக்கல் வடிவமாக வெளிப்பட்ட வண்ணமே இருக்கின்றது.

இந்த கசப்பான கடந்தகாலம் கலைஞர்களுக்கு அல்லது படைப்பாளிகளிடமிருந்து அழகியலும், திறனும் கலந்து கலைவடிமாக வெளி வருகின்றது. கவிதை, கதை, ஓவியம் என்று அதன் வடி வம் மாறினாலும் அதுபேசும் செய்தியும் அழகியலும் கடந்தகாலத்தை நிகழ்காலத்தில் நின்று இரைமீட்டு, வலிகளையும், மனத்து இடைவெளிகளையும் பதிவு செய்கிறது. அத்தகைய போரின் மனத்து வெடிப்புக்களை ஓவியங்களாக்கியிருக்கின்றார் ஓவியர் கஜேந்திரன்.

ஓவியர் கஜேந்திரன் தன்னுடைய பால்யத்தை யாழ்ப்பாணம், வன்னி முதலான போர்ச் சூழல்களில் கழித்தவர். போர் - போராட்டம் - துயரம் - கண்ணீர் என்று அவருடைய இளமைக்காலம் போரினால் வளர்க்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலை வரலாற்றுத்துறையில் பட்டம் பெற்று உதவி விரிவுரை யாளராக பணியாற்றிய கஜேந்திரன், ஓவியர் சனாதனன் முதலானவர்களின் பட்டறையில் இருந்து வெளிவந்தவர்.

நவீன, பின்நவீன பாணிகளை அதிகம் கொள்ளும் இவருடைய ஓவியங்கள் எழுப்பும் கேள்விகள் பல திசைகளை திறந்துவிடுகின்றன. கடந்த பங்குனி மாதம் நடைபெற்ற இவருடைய ஓவியகாட்சி நான்கு சுவர்கள் சூழ்ந்த செயற்கைவிளக்குகளான ஒளியூட்டப்பட்ட சூழலில் நடைபெறவில்லை. திறந்த அவருடைய வீட்டின் முற்றத்து மதிலில், காற்றும் மிதமான ஒளியும், நிழலும் கொட்டும் இடத்தில் நடைபெற்றது. ஓவியத்தின் பிரதிமை பார்வையாளன் கண்ணிலும் பார்வையாளன் பிரதிமை ஓவியத்திலும் வீழ்ந்து, தரிசனத்தை ஓவியத்தின் உயிர்ப்புக்குள் வீழ்த்தும் வகையில் முற்றிலும் மாறுபட்ட காட்சிச் சூழலை கஜேந்திரன் தெரிவு செய்ததில் இருந்துஓவியங்கள் நன்கு உயிர்பெற்றன

பல ஓவியங்களுக்கு தன்னை மாதிரியாக்கிய கஜேந்திரன், ஓவிய உடலில் வரைந்த வண்ணங்களும் கோடுகளும், கடந்த காலத்தின், இழப்புக்களினதும், தோல்விகளினதும், துயரினதும் சாட்சியாக வெளிப்பட்டு நிற்கின்றன. அவர் உருவாக்கும் முகங்களிலும், உருக்களிலும் தெரியும் உணர்வுகளும்,



நிறங்கள் சொல்லி நிற்கும் செய்திகளும் கோடுகள் கற்பிக்கும் எண்ணற்ற அர்த்த சாத்திய கதவுகளை சுவைஞனின் உணர்வுத் தளத்தில் உருவாக்கிச் சென்றது. சில ஓவியங்கள் அடுத்தடுத்து தொடர்புடைய தொடர் பிரதிமைகளாகவும் சில இரட்டை எதிர் நிலைகளை கொண்ட தாகவும் இருந்தன. அவை சமகால நவீன ஓவியப்பாணி முயற்சிகளை நம்மவர்களும் கைக்கொள்வதை காட்டி நிற்கின்றன முட்கம்பிகள் உத்தரிக்கும் ஆன்மாக்கள் மீது சுற்றி இறுக்க, பகடைக் காய்கள் உருள, கஜேந்திரனின் ஓவியங்கள் பேசுகின்ற அரசியல் ஒருகாலத்தின் மீள் வாசிப்புக்கும் ஆவணமாக்கலுக்கும் உரியது.

எல்லாக்காலங்களிலும் வன்முறைகள் நிகழ்கின்றன. மனிதத்துவத்துக்கு எதிராக இயங்கும் அத்தனை வன்முறையையும் நேர்மை மிக்க கலைஞன், தன்னுடைய அடிமனத்தின் திரட்சியின் உந்துதலால் கலையாக வடிக்கிறான். கஜேந்திரனின் 'தவிப்பு' கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்த அத்தனை ஓவியப்பிரதிகளும் போர்க் காலத்திலும் அதன் பின்னரும் தவித்து கிடக்கும் போர்ப்பொழுதின் மனிதக் குழந்தை யொன்றின் மனத்தின் உத்தரிப்புக்களாகவே இருந்தன.

பாடுபொருளிலும் சரி, அழகியலிலும் சரி சர்வதேச தரத்தில் ஓவிய வெளிப்பாடுகள் ஈழத்தில் பரவலாக வெளிவரத் தொடங்கிவிட்டன என்பதற்கு கஜேந்திரன் முதலான இளம் படைப்பாளிகள் நல்ல எடுத்துக்காட்டுகள் எனலாம்.

அனுபமா

சிறுவர் தொடர்

# பூதத்தீவுப்புதிர்கள்

01



- செங்கை ஆழியான் -

கடலலைகளைக் கீறிக்கிழித்தபடி விசைப்படகு விரைந்துகொண்டிருந்தது. அதிகாலை வேளை பனிக்குளிரில் பயணம் செய்வது இனிய ஓர் அனுபவம், கிழக்குவானில் அடியில் சூரியன் எழுந்து தன் கதிர்களை பரப்பத் தொடங்கியிருந்தது. கடல் மிகுந்த அமைதியாக இருந்தது.

ஒன்பது அடி அகலமான இயந்திர படகு. அகலத்தைப்போல இரண்டரை மடங்கு நீளத்தைக் கொண்டிருந்தது. அப் படகில் 30 பயணிகள் இருந்தார்கள். அவர்களில் இருவர் தவிர ஏனையோர் ஒரே வயதுடைய மாணவர்கள் 15 பராயத்திற்குள் தான் மதிப்பிடலாம். எஞ்சிய இருவரின் வயதையும் உயரத்தையும் கொண்டு பார்க்கும் போது அவர்களை அழைத்துச் செல்லும் ஆசிரியர்கள் எனக் கணிக்கலாம். படகில் ஒரே கும்மாளமாக இருந்தது. மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டனர். எனினும் சிலரின் முகங்களில் முதல் கடற்பயணம் என்பதால் ஏற்பட்டிருக்கும் பயத்தினைக் காணமுடிந்தது. வசந்தனுக்கு இது முதல் கடற்பயணம் என்றாலும் அவனைப் பயம் ஆட்கொள்ளவில்லை. வியப்புத் தான் ஆட்கொண்டிருந்தது.

அவர்கள் அடங்கா ஆவலுடன் தம்மைச் சுற்றிப் பார்த்துக்கொண்டனர். தீவுக்கூட்டங்கள் ஊடாக அவர்களின் படகு விரைந்தது. அதனால் அவர்கள் பயணப்பாதையின் இருமருங்கும் திரள் கோடுகளாகத் தீவுகள் தெரிந்தன.

"யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்குப் பக்கத்தில் பல தீவுகள் சிறிதும் பெரிதுமாகவுள்ளன. காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு என்பன அவற்றில் முக்கியமானவை. இப்பொழுது நாங்கள் செல்லவிருக்கும் நெடுந்தீவு அவற்றில் ஒன்றாகும். வெகுதூரத்தில் இருப்பதால் அதற்கு நெடுந்தீவு என்று பெயர்" என்றார் ஆசிரியர் மூர்த்தி.

"நெடுந்தீவில் குதிரைகள் இருக்குமாமே?" என்று வியப்புடன் சசி கேட்டாள்.

"ஒரு காலத்தில் அங்கு ஏராளமான குதிரைகள் இருந்தன. ஒல்லாந்தர்கள் அங்கு குதிரை வளத்தார்கள். இன்று அவை எண்ணிக்கையில் குறைந்துவிட்டன. தக்க பராமரிப்பு இல்லாமல் அவை கட்டைக் குதிரைகளாக மாறியும் விட்டன" என்றார் ஆசிரியர்.

அமைதியாகவும் சீராகவும் விரைந்து கொண்டிருந்த படகு இப்பொழுது சற்று ஆடுவது போலப்பட்டது. படகின் விளிம்புகளை எல்லோரும் இறுகப் பற்றிக்கொண்டனர்.

(புதிர்கள் தொடரும்...)




ஒளிப்படம் - சுரேன்

# பேணிப்பந்து

அப்போது எங்கள் கிராமங்களிலும் தெருக்களிலும் டீவியும், கணினியும், கைபேசியும் ஆக்கிரமிக்காத சிறுவர்கள் இருந்தார்கள். பழைய பேணிகளை சிரட்டைகளை தேடித்தேடி சேகரித்துக் கொண்டு போய் மைதானத்தில் அடுக்குவார்கள். மென் பந்து ஒன்றை வாங்கிக்கொண்டு இரண்டு "கன்னைகளாக" தங்களை பிரித்து கொண்டு குறிபார்த்து பேணிக்கோபுரத்தை வீழ்த்துவார்கள். வீழ்த்திய "கன்னை" அவற்றை அடுக்க வேண்டும். அடுக்கவிடாமல் எதிர் "கன்னை" பந்தினால் அவர்களை அடித்து ஆட்டமிழக்க செய்ய வேண்டும். எறியப்படும் பந்திலிருந்து லாவகங்களை, தந்திரங்களை கையாண்டு தப்பி சிதறிய பேணிக்கோபுரத்தை மீண்டும் கட்டி முடிப்பார்கள். இது மாறி மாறி நிகழும். அதி உற்சாகமான இவ்விளையாட்டு உடலுக்கும் மனதுக்கும் சந்தோச மருந்து. மாலை வேளைகளில் சிறு பிராயத்தின் அதிக கதைகளை கொண்டதாக இருந்த இந்தப் பேணிப்பந்து / சிரட்டைப்பந்து விளையாட்டு இப்போது அருகிப் போய் விட்டது. நாம் நம்முடைய உண்மையான கொண்டாட்டத்தை தொலைத்து விட்டோம் என்பதையே இது காட்டுகின்றது.

# வாண்டு மூவீஸ்




## மாவீரன் டார்ஸன்

இதுவரை கார்ட்டூன் அனிமேசனில் மட்டும் சாகசம் நிகழ்த்தி வந்த மாவீரன் டார்ஸன் இப்போது திரைப்படமாகி இருக்கின்றான். உயர்தொழிநுட்ப காட்சி உருவாக்கங்களுடன் பிரமிக்க வைக்கும் பிரமாண்டத்துடனும் டார்ஸன் ஜூலை 01 ஆம் திகதி வருகின்றான்.

# கெட்டிக்காரன் புளுகு



ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் உற்சாகமாய் சேவல் பலதடவை கூவியது. இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரிக்கு சரியான பசி இருந்தது. அந்த சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது. ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப்பார்த்து, "சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. அன்பாய் நடந்து கொள்ள வேண்டும், சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது.

இதைக் கண்ட நரி, என்ன "சகோதரா!, ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது?" என்று கேட்டது.

அதற்கு சேவல், "அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள் தானா என்பதைக் கவனிக்கிறேன்"

அவ்வளவு தான். நரிக்கு உடல் நடுங்கி விட்டது. வேகவேகமாக "சரி, சரி நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறி கிளம்பியது.

சேவல், "அருமை சகோதரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று"

அதற்கு நரி "அந்த ஒப்பந்தைத்தைப் பற்றி அநேக பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள், அந்த நாய்களுக்கு தெரியாமல் இருந்தால், நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்"

இதை சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக்குள் மறைந்தது.

சேவல் "யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறி சிரித்தது.

(கெட்டிக்காரன் புளுகினாலும் அது புத்திச்சாலியிடம் வெளிபட்டு விடும்.)

# "கொப்பியடிக்கும்" ஈழத்துப்பாடல்கள்


ஈழத்து திரையில் சமீபகாலமாக அதிகளவிலான பாடல்கள் காட்சியாக்கப்படுகின்றன. பல கவனிப்பைக் கோரும் பாடல்கள் வந்து கொண்டிருந்தாலும் தென்னிந்தியாவிலும் உலக அளவிலும் பிரபலமான பாடல்களை கொப்பியடித்த பாடல்களும் நம்மிடம் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை பார்ப்போம் .

## சிவன் - இன்னொரு "நடுவன்"

பெயர் - பாடலின் கருத்து - நடிகர்களின் ஒப்பனை - காட்சிகள் என்று இருக்கின்ற முக்கால்வாசி அம்சங்களையும் நடுவனிலிருந்து சிவனுக்குப் பொருத்திப் பார்க்கலாம் . நடுவன் பாடல் DR. Burn ஆல் எழுதி இசையமைக்கப்பட்ட பாடல். அதன் பார்வையாளர் தொகையும் ஒரு கோடியைத் தாண்டி இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பாடலை - ரீமேக் செய்து ஒரு யாழ்ப்பாண "வெர்ஷனை"( Version ) செய்திருக்கிறார்கள்.

"சிவன்" உமாகரனால் எழுதி இயக்கப்பட்டு பத்மயனால் இசையமைக் கப்பட்டு நிஷாந்தன் ராஜகுலசிங்கத்தால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.


சிவன்


நடுவன்

**ப்ளஸ்** - யாழ்ப்பணத்தில் இருக்கின்ற குறைந்தளவான வச திகளைப் பயன்படுத்தி இருந்தாலும் கூட ஒப்பீட்டளவில் நல்ல முயற்சி. ஒளிப்பதிவு அழகு. கருத்து ஒன்றாக இருந்தாலும் திரைக்கதையினை வித்தியாசமாக எழுதியிருக்கிறார்கள். நண்பன் - நண்பனின் துரோகம் - தொடரும் உறவு - மறுபிறப்பு என்று சமகால வெட்டுக் குத்து நிலவரம் வரை தொட்டுச் சென்றிருக்கிறது திரைக்கதை.

**மைனஸ்** - சிவ வழிபாடு சார்ந்து உருவான காட்சியமைப்பு மற்றும் கருத்தியல் தழுவல்களை தவிர்த்திருக்கலாம். இன்னும் புதிதாக வேறு வகையில் இதைச் சொல்லியிருக்கலாம்.


நெடுஞ்சாலை


பூவிழி

## பூவிழி - யாழ்ப்பாணம் வரை நீண்ட "நெடுஞ்சாலை"

பூவிழி பாடலை அவதானித்தால் நெடுஞ்சாலை திரைப்படத்தில் வரும் பாடல்களின் காட்சியமைப்பு, உடை, நடிப்பு என்பவற்றை போலச்செய்திருப்பதை இயல்பாக உணரலாம்.

"பூவிழி" சாயிசங்கர் எழுதி இயக்கி சுதர்சன் இசையமைத்து (புலவர்) ரமேஸால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

**பிளஸ்** - பூவிழி பாடலின் வரிகள் அழகானவை. நடிப்பும் பாராட்டுக்குரியதே. யாழ்ப்பாணத்தின் நிலவியலை விரிவாகவும் கண்ணுக்கு இனிய முறையிலும் காட்சிப்படுத்தியமை இந்தப் பாடலின் முக்கியமான அம்சமாகும்.

**மைனஸ்** - வந்த புதிதிலேயே அதன் காட்சியமைப்புக்காக நெடுஞ்சாலையின் பாடல் பேசப்பட்டது. பூவிழியும் அவ்வாறே கிட்டத்தட்ட அந்த பாடலுக்கு இணையான காட்சியமைப்பை கொண்டுவந்திருப்பது பாராட்டுக்குரிய துதான். ஆனாலும் ஆடை முதல் வயல் வரை எல்லாமும் ஒன்றாக இருப்பது சலிப்பைத் தருகிறது.

## சோலையன் - அடடே "கும்கி"

கும்கி திரைப்படத்தை அநேகம் பேர் பார்த்திருப்பீர்கள். அதன் சாயல் அதிகம் உள்ள பாடலாக சோலையன் உள்ளது. திரைக்கதை, இயக்கம் மற்றும் ஒளிப்பதிவு - "புலவர்" ரமேஷ், இசையமைப்பு - பத்மயன், பாடலை எழுதியது ஜோன்சன்.

**ப்ளஸ்** - ஒளிப்பதிவு நன்றாக உள்ளது, பழைய காலத்தைச் சேர்ந்த காட்சியமைப்பொன்றை தேர்வு செய்து இயக்கியமை.

**மைனஸ்** - ஆடைத் தேர்வில் உள்ள பொருத்தப் பாடின்மை - சோலையனின் கதாநாயகி கும்கி நாயகியின் ஆடைகளை ஒத்த வடிவமைப்பை பயன்படுத்தியுள் ளமை. காலா காலமாக ஒரே விதமான காதல் மயக்கங் களை படம் பிடித்தல், மேலும், பாடலில் கதாநாயகி கதாநாயகனை குளத்தில் காணும் காட்சி அச்சுப் பிச காமல் "அடடே" கும்கி தான்.


சோலையன்


கும்கி

**இதையெல்லாம் பார்க்கும் போது கானமயில் ஆட கண்டிருந்த வான்கோழி தானும்... என்ற வரிகள் தான் நினைவுக்கு வருகிறது எங்களுடைய தனித்துவ அடையாளங்களை எப்போது நாம் கண்டுபிடிக்கப்போகிறோம்?...**




## விரைவில்... "யாழ்தேவி"

லோககாந்தனின் இயக்கத்தில் வெளிவரத்தயாரக இருக்கும் முழு நீளத் திரைப்படம் யாழ்தேவி. அண்மையில் இசைவெளியீடு முடிந்த நிலையில் படத்தின் இறுதிக் கட்டப்பணிகள் நடைபெற்றுவருவதாக இயக்குனர் குறிப்பிட்டுள்ளார். ஈழத்திலும், இந்தியாவிலும் மற்றும் புலம்பெயர் தேசங் களிலும் உள்ள கலைஞர்களின் கூட்டு முயற்சியால் வணிக சினிமா பாணியில் எடுக்கப்பட்டுள்ள யாழ்தேவி விரைவில் புலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் திரையிடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# "பஞ்சபூத" கபாலி




சினிமா உலகத்தை கபாலி காய்ச்சல் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் வெளியான கபாலி படப்பாடல்கள் புதுபரபரப்பை கிளப்பிவிட்டிருக்கின்றன. 2000 ஆம் ஆண்டு வெளியான "ரிதம்" திரைப்படத்தின் பாடல்கள் ஒவ்வொன்றும் நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்ற பஞ்ச பூதங்களைப் பாடும் வகையில் ஏ.ஆர்.ரஹ்மான் அமைத்திருப்பார். அதனைப்போலத்தான் கபாலியின் ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு பூதத்தையும் தாங்கி வருகின்றது என்பதை அடையாளம் கண்டு இணையவுலக வாசிகள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். சந்தோஷ் நாராயணனின் இசையில் கபாலி அல்பத்திற்கான பரபரப்பு இன்னும் சூடு பறக்கிறது.



ஹோலிவுட் உலகில் இதுவரை ஜேம்ஸ் பொண்டாக 04 படங்களில் கலக்கிய டேனியல்கிரேக் இனி ஜேம்ஸ்பொண்டாக நடிக்கமாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. உலகப்புகழ் பெற்ற ஜேம்ஸ்பொண்ட் கதாபாத்திரத்தை ஏற்று அடுத்து சாகசங்கள் புரிவதற்கு பலருடைய பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அந்த வரிசையில் தோர், அவேஞ்சர்ஸ் படங்களில் "லோகி" என்னும் வில்லனாக கலக்கிய (tom hiddleston) முன்னிலையில் இருக்கின்றார்.

ரொம் ஹிட்ரெல்ஸ்ரன் "அவெஞ்சர்ஸ்" படங்களில் சூப்பர் ஹீரோக்களுக்கு இணையாக வில்லன் கதாபாத்திரத்தில் மிரட்டி ஹோலிவுட் ரசிகர்களின் மனதை பிடித்துக்கொண்டவர்.


## சர்ச்சையில் உட்தாபஞ்சாப்




"உட்தா பஞ்சாப்" தற்போது பாலிவூட் சினிமாவில் அதிகம் பேசப்படும் படத்தின் பெயர். இளம் இயக்குனர் அபிஷேக் சௌபே இயக்கத்தில் வெளியாக உள்ள இப்படம் இந்திய தணிக்கை குழுவினரால் சகட்டுமேனிக்கு கத்தரிக்கப்பட்டிருக்கின்றது, இந்திய ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் படத்தை தடைசெய்யக் கோருகின்றனர். விவகாரம் நீதிமன்று வரை சென்றுள்ள நிலையில், அப்படி என்னதான் சொல்கிறது படம் என்றால், இந்தியாவின் புகழ்பூத்த மாநில மான பஞ்சாப்பில் போதைப் பழக்கம் உள்ளிட்ட சகல சட்டவிரோத செயல்களையும் போட்டு உடைத்திருக்கின்றது படம். படத்தை வெளியிட்டால் கலவரமே வெடிக்கும் என்ற அளவுக்கு விவாதங்கள் நிகழ்கின்றன. படத்தை கத்தரித்தமைக்கு சகல வலைத் தளங்களிலும் எதிர்ப்புக்களும் வலுவாக முன்வைக்கப்பட்ட வண்ணமுள்ளன.


## கம்மாட்டி பாடம்

துல்கர் சல்மான் நடிப்பில் இயக்குனர் ராஜீவ் ரவியின் இயக்கத்தில் வெளியாகி இருக்கும் மலையாள சினிமா "கம்மாட்டி பாடம்" நாம் வியந்து பார்க்க வேண்டிய இந்திய சினிமாக்களில் ஒன்று, ஒரு நகரத்தின் வளர்ச்சியை கண் முன்னே நிறுத்தியிருக்கிறார் இயக்குனர். ஒவ்வொரு கட்டத்திலும் இயக்குனரின் பதிவு வியக்கத்தக்கது,



படத்தின் ஒளிப்பதிவு கதையோடு நகர்ந்து முழுவதுமாய் நம்மை ரசிக்கச் செய்துவிடுகிறது. படத்தோடு சேர்ந்த இசை அருமை. மொத்தத்தில் இது காட்சிபூர்வமான "சினிமா" என்று பலரின் வரவேற்பை பெற்றிருக்கிறது படம். ஒப்பீட்டளவில் சமகாலத்தில் வலுவான சினிமாக்களை மலையாள இயக்குனர்கள் படைக்கின்றனர். அந்த வகையில் கம்மாட்டி பாடம் உலகளவில் வியந்து பேசப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சைபர் மீன்கள்




## சுவரில் கொய்தவை

**Dhuvaragann Ramalingam**
19 mins ·

அபசகுணமா பேசுறான் என்பதுதான் எப்போதும் பேசுபொருள் சகுணம் பார்க்கும் முட்டாள் தனம் பற்றி எவரும் கண்டுகொள்வதில்லை!!

**Vaamalosanan Loshan Ragupathy Balasridharan**
1 min · Twitter ·

இன்றைக்கும் அடிபிடிப்பட்டு பாராளுமன்றத்தை ஒத்திவைப்பார்கள் என்று பார்த்தா, டெக்னிக்கல் இஷ்யூவாம்

புதுசு புதுசா உருவாக்கிறாங்க போல.

**Ajanthakumar Tharumarasa**
36 mins ·

என் கைபேசியின் பற்றரியை கழட்டி அதுக்கு கீழை இரண்டு ரூபாயை வைத்து போனை மூடிவிட்டு போனுக்குக் காசு போட்டுவிட்டேன் என்று சிரிக்கிறான் மகன்.

**Kishoker Stanislas**
1 hr ·

உலக சமுத்திரங்கள் தினமான இன்று . உலகில் சுத்தமான கடல்கள் அருகிவருவதாக ஐநா தவல்ல வெளியிட்டுள்ளது தட் கடலே இல்லையாம் மொமன்ட் !

## இசைப்புயலும் கிரிக்கெட் புயலும்



ஏ.ஆர்.ரஹ்மான். இந்தியாவில் நடைபெற விருக்கும் "பிரிமியர் பட்ஸெல் லீக்" உள்ளரங்க கால்பந்து தொடருக்கான அல்பம் ஒன்றை விரைவில் வெளியிட விருக்கிறார். இந்த அல்பத்தில் கிரிக்கெட் வீரர் விராட்கோஹ்லி குரல் கொடுக்க விருக்கிறார். அவருக்காக "ராப்" பகுதி ஒன்றை உருவாக்கியுள்ளாராம் ரஹ்மான். "நாம்ஹை ஃபட்சல்" என்ற இப்பாடலுக்கான ஒலிப்பதிவு விரைவில் நடைபெறவிருக்கிறது. வலைத் தளங்களில் கோஹ்லியும் ரஹ்மானும் இணைந்த போட்டோக்கள் அதிகம் பகிரப்படுகின்றன.

## இந்தவார மீம்ஸ் (Meme)




## பேச்சு இரகசியம்

இந்திய பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆகியோரின் சொற்பொழிவுகள் சகல வலைத்தளங்களிலும் பிரபலமாகப் பேசப்படுகின்றது. எப்படி இவர்கள் இவ்வளவு தெளிவாக நிமிர்ந்து நின்று பேசுகின்றார்கள்! அதற்காகவே விசேடமாக வடிமைக்கப்பட்டிருக்கின்றன டெலிபிராம்ப்ட் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய "பிராம்ப்ட்" வெளியிலிருந்து பார்க்கும் போது கண்ணாடி போலத் தெரியும். எதிரில் இருப்பவர்களுக்கு மட்டுமே திரையில் எழுத்துக்கள் தெரியும். படிப்பவரின் உச்சரிக்கும் தன்மைக்கேற்ப இந்த பிராம்ப்ட்டை யாரோ ஒருவர் இயக்குவார். ஆக இது தான் மோடியினதும் ஒபாமாவினதும் பேச்சுகளின் இரகசியம்.

இதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் ஒபாமா, மோடியின் பெயரைச் சொல்லி சந்தை வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டிருப்பது வேறு கதை.



**உங்களுடைய வலைப் பதிவுகளையும் அல்லது உங்களைக் கவர்ந்த வலைப்பதிவுகளையும் சைபர் மீன்களுக்கு அனுப்பி வையுங்கள். தகுதியுடைய பதிவுகள் இப்பக்கத்தில் பிரசுரமாகும் இணைப்புக்களையும் பதிவுகளையும் phuthuvithi@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**



# இந்திரவிழா ஒளியின்கொண்டாட்டம்






இந்து சமய நம்பிக்கைகளின் பிரகாரம் தலைமைத் தேவனும், மேகக்கூட்டத்திற்கு அதிபதியுமான இந்திரனை பூஜிக்கும் ஒரு திருவிழாவாக இந்திர விழாவை முன்னெடுப்பர். தமிழ்நாட்டில் இத்தகைய இந்திர விழா பற்றிய தகவல்கள் சிலப்பதிகாரம் முதலான பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. கடற்கரை கிராமமான வல்வெட்டித்துறையிலும் இன்று வரை இந்திர விழா சிறப்பான முறையில் அழகியலும் பக்தியும், மனிதக் கொண்டாட்டமும் நிறைந்ததாக நடைபெறுகின்றது. ஏராளமான மக்கள் அணி திரளும் இந்த திருவிழா பண்பாடும், சமூக அசைவும் மிக்க முக்கிய நிகழ்வாக வடமராட்சி பகுதியில் கருதப்படுகின்றது. சாதி, இன, மத பேதங்களை மறந்து இங்கே நடைபெறும் வண்ணக்காட்சிகள், கலைநிகழ்வுகள் முதலான கொண்டாட்டங்களில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

இந்த வருடமும் வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் இறுதி நாளான தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் முன்னெடுக்கப்பட்ட இந்திரவிழா, கடந்த சித்திரை மாதம் வெகு விமரிசையாக நடைபெற்றது. விழாவின் பிரதானமாகக் கருதப்படும் நெடியம்பதியான் ஆலய தெற்குவீதியில் அமைக்கப்பட்ட பந்தலில் அம்பாள் அமர்ந்திருக்க நெடியகாடு மோர்மட முன்றலில் கலாசார நிகழ்வான மேளக்கச்சேரிகளும் வில்லுப்பாட்டு மற்றும் பரத நாட்டிய ஆற்றுகைகளும் அரங்கேறின.

இளைஞர்களால் 40, 20 அடி என புகைக்கூண்டுகளும் ஏனைய சிறிய வண்ண நிறங்களிலான பல புகைக்கூண்டுகளும் விண்ணை நோக்கி ஏவப்பட்டன. பொம்மலாட்டங்களும் பலவித கலை நிகழ்வுகளும் வருவோரை கவர்ந்திழுத்தன. விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நிலத்தில் மக்கள் ஒளியினுள் புகுந்து திருவிழாவில் கலந்தனர்.

கடலின் நடுவே மின் அலங்கார மேடை அமைக்கப்பட்டு இன்னிசை கானங்களும் இடம்பெற்றன. தொங்கு பாலத்தில் கண்ணைக் கவரும் வண்ணமயமான மேடையில் மேளக் கச்சேரிகளும் இன்னிசை கானங்களும் விடிய விடிய தொடர்ந்தன.

அம்மன் உருவங்கள், நீர் விளையாட்டுக்கள், பாரம்பரிய நடனங்கள், விநோத உடை ஊர்வலங்கள், அலங்காரத் தோரணங்கள் என்று அந்த இரவை ஒவ்வொருவரும் அலங்காரப்படுத்தினர். தமிழர் பண்பாட்டின் ஒரு கூறாக இருக்கும் தண்ணீர்ப் பந்தல்கள் அங்காங்கே தோன்றி, நடந்து நடந்து திருவிழாவைக்கொண்டாடுபவர்களின் தாகம்தீர்த்தன. குறிப்பாக இளைஞர்களும் சிறுவர்களும் தண்ணீர்ப்பந்தலுக்குள் நின்று மக்களின் கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.

இம்முறை அம்பாளின் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு நடந்த இந்திரவிழாவுக்கு அனைத்து வல்வை மக்களும் கொண்டாட்ட நிகழ்வுகளையும் அலங்காரங்களையும் போட்டி போட்டு செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த ஆரோக்கியமான போட்டி விழாவை சந்தோசத்தாலும் ஒளியாலும் நிறைத்தது. இங்கே திருவிழாவுக்குள் உட்பட்ட ஒவ்வொரு பிரதேசமும் அடுத்த பிரதேசத்துடன் ஒளியாலும் இசையாலும், மக்கள் கூட்டத்தாலும் அந்த நீண்ட தெருக்களில் இணைந்து நின்று மகிழ்ந்திருந்த காட்சி லட்சம் கதைகளைத் தந்தது.

பக்தி நிலையைத்தாண்டி ஆடை, உணவு, இசை,ஂ கலை, என்று பெரும் பண்பாட்டு கொண்டாட்டமாக இந்திரவிழா மாறியது. பெரும் இன்னல்களைக் கடந்து வந்த எம்முடைய மக்களை கொண்டாட்டத்திலும் உணர்வுத்தளத்திலும் நிகழ்த்தப்படும் இத்தகைய திருவிழாக்களே இன்னும் இறுக்கமாக பிணைத்து நிற்கின்றன.

இவ்வாறு மக்கள் ஒன்று கூடுகின்ற கொண்டாட்ட நிகழ்வுகளை வெறுமனவே கேளிக்கை நிகழ்வுகள் என்று சொல்வதிற்கில்லை. மக்கள் தம்மிடையான பேதங்களைக் களைகின்ற, பண்பாட்டை பகிர்ந்து கொள்கின்ற ஆரோக்கிய மான களங்களாகும். இங்கே நடைபெறும் சிறு சண்டை, சச்சரவுகள் கூட மனிதத் தொடர்புகளை இன்னும் இறுக்கப்படுத்தும் வேலையையே செய்கின்றன.

இவ்வகையில் இந்திர விழாவை யாழ்ப்பாண பண்பாட்டு அசைவின் முக்கிய கொண்டாட்டமாக கருதவேண்டும்.

ஸ்வஸ்திகா கரிகாலன்
வல்வெட்டித்துறை



# தலைநகரில் தமிழனின் வாழைப்பழக்கடை




கி.மு 327 இல் அலெக்ஸாண்டர் இந்தியாவிற்கு படையெடுத்து வந்தபோது வாழைப்பழத்தை விரும்பிச் சாப்பிட்டிருக்கிறார் என்பது வரலாறு. அவர் திரும்பிப்போகின்ற வழியே கிரேக்க நாட்டிலும் மேலை நாடுகளிலும் வாழைப் பழத்தை அறிமுகப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். இந்தியாவிற்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் வருகை தந்த அரேபியர்கள் இதை அடிமை வியாபாரத்துடன் சேர்த்து எடுத்துச்சென்று விற்பனை செய்ததாக வரலாறு. அந்த அடிமை வியாபாரிகள் வாழைப்பழத்திற்கு இட்ட பெயர் பனானா. அரேபிய மொழியில் பனானா என்றால் விரல் என்று அர்த்தம். அந்தக் காலத்தில் விரல் நீளமாகவே காணப்பட்டது வாழைப்பழம்.

நமது சமூகத்தில் வாழைப்பழம் இல்லாத விழாக்களும் விசேஷங்களும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நமது முன்னோர்கள் கூறிய முக்கனிகளில் ஒன்று வாழைப் பழம். பல மருத்துவ குணங்களைக் கொண்டது, வசதிபடைத்தவர்கள் தொட்டு ஏழைகள் அவர்தம் உணவுப்பழக்கங்களில் வாழைப்பழம் தவறாது இடம் பெறுவதென்பதுபெருமைமிக்க விடயம். அத்துடன் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் விலை மலிவாகவும் போஷாக்கு நிறைந்த உணவுகளில் ஒன்றாகவும் வாழைப்பழம் உள்ளது என்று குறிப்பிடுவது சாலச்சிறந் தது.

அத்தகைய அருமைமிக்க வாழைப்பழத்திற்கும் யாழ்ப்பாணத்திலுள்ள சுழிபுரம் என்ற கிராமத்துக்கும் நெருங்கிய உறவும் தொன்மைமிக்க வரலாறும் உண்டு என்பதைப்பலர் அறிவர். இற்றைக்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக தலைநகரிலும் அதற்கு அண்டிய புறநகர் பகுதியிலும் அதிகளவிலான வாழைப்பழக்கடைச் சொந்தக்காரர்களாக சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களே இருந்திருக்கிறார்கள். 1983 இல் நடைபெற்ற இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு பலர் கடைகளை மூடிவிட்டு ஊர் திரும்பியிருப்பினும், சில கடைகள் இன்றும் வழக்கிலுள்ளன. அத்தகைய தொன்மை வாய்ந்த கடைகளில் ஒன்று என்ற பெருமை, பம்பலப் பிட்டி கந்தையா கடைக்கு உண்டு. மூன்றாவது தலை முறையாக கணேஷ்- குமார் சகோதரர்களால் இந்தக் கடை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கடையில் வாழைப்பழங்களே முதன்மை பெற்ற வியாபாரமாக இருப்பினும் இந்திய வெளியீடுகளான ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம் போன்ற அனைத்து சஞ்சிகைகளுடன் உள்ளூர் தினசரிகளும், சஞ்சிகைகளும் இங்கே கிடைக்கின்றன. அத்துடன் அனைத்து பூஜைக்குரிய பொருட்களும் பெண்களுக்குரிய சாதனப் பொருட்களில் சிலவும் வழிபாட்டிற்குரிய உருத்திராட்சம் மாலைகள், விளக்குகள், மண்விளக்குகள் என்பனவும் அவர்கள் விற்பனைப்பட்டியலிலுண்டு. பிரசித்தி பெற்ற இந்திய ஊதுவத்திகளைத் தேடி வருகின்ற வாடிக்கையாளர்களே அதிகம். இவர்களின் வாடிக்கையாளர்கள் பல மதத்தைச் சார்ந்தவர்கள் என்பது இவர்களுக்குரிய சிறப்பம்சங்களில் ஒன்று. கந்தையா கடைவாயில் தேங்காய் மற்றும் செவ்விளநீர் என்பனவற்றால் எப்பொழுதும் நிறைந்து கிடப்பதைக் காணலாம்.

“எனது தாத்தா காலத்தில் ஏறத்தாழ 107 கடைகள் இருந்ததாக சொல்லக்கேட்டிருக்கிறேன். அவர்களெல்லாம் ஒன்று கூடி, சங்கம் ஒன்றினை அமைத்து கட்டுக்கோப்பாக தமது வியாபாரத்தை நடத்தியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் தமது வியாபாரத்தில் கண்ணியம் மிக முக்கிய பங்கை வகித்ததாக என் தாத்தா சொல்லக் கேட்டிருக்கிறேன்” என்றார் குமார்.

வாழைக்குலையைப் பழுக்கவைக்க முன்னோர்கள் உபயோகித்த புகைப் பெட்டியை இன்றும் இவர்கள் கடையின் பின்புறத்தில் காணலாம்.

“போக்குவரத்து அதிகம் காணப்படாத அந்தக்காலத்தில் காயாகக் கொண்டு வரும் குலைகளை பழுக்கவைக்க இந்தப் பெட்டி அதிகம் பயன் பட்டது. தற்போது போக்குவரத்து அதிகம் காணப்படுவதால் பெரும்பாலும் பழக்குலைகளாகப் பார்த்துக் கொள்வனவு செய்கிறோம். அதனால் குலைகளைப் புகைபோட்டுப் பழுக்கவைக்கின்ற தேவை அதிகம் ஏற்படுவதில்லை. அத்துடன் வாழைப்பழத்தை எல்லா இடங்களிலும் வாங்கலாம். இருந்தும் தரத்திற்காகவும் இரசாயனச் சேர்க்கையற்ற பழத்திற்காகவுமே அதிக அளவினர் நம்மைத் தேடி வருகின்றனர்” என்கிறார் கணேஷ்.

எனது கல்விக்காலங்களை கொழும்பில் கழித்த போது, பல சுழிபுரத்து வாழைப்பழக்கடைகளைப் பார்த்திருக்கிறேன். யாழ்ப்பாணத்துநினைவுகளை எமக்களித்த அத்தகைய அடையாளத்துடனான கடைகளைக் இன்று தலைநகரில் காண்பது அரிதாகி விட்டது. வளர்ச்சி என்ற போர்வையில் பலவற்றை இழந்து கொண்டுதான் போகிறோம்.

# சண்டைக்குப் பின் “கொமடி”

■ ஸபர் அகமட்


ஒரு பயங்கர சண்டைக்காட்சி நடக்க முன்போ அல்லது பின்போ பார்ப்பவர்களை “பலன்ஸ்” பண்ணி ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக தமிழ் சினிமா வில் ஒரு ‘கொமடிக் காட்சி’ வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டிருக்கும். அதே போன்றுதான் இலங்கை முஸ்லிம் அரசியலும். இதற்கும் தமிழ் சினிமாவுக்கும் இடையில் அட்டகாசமான ஒற்றுமை ஒன்று இருக்கின்றது. கடந்த ஒரு தசாப்த கால பத்திரிகை நறுக்குகளை அல்லது அறிக்கை மன்னர்களின் செயற்பாடுகளை தொடர்ந்து அவதானித்தால் புரிந்திருக்கும்.. இதே பாணியில் “லேட்டஸ்டாக” கிழக்கு தலைமைச்சரின் “ப்ரோட்டோகோல்” (ஒழுங்கு நடை முறை) என்ற பூதம் வெளிவந்து நாடு முழுதும் பூகம்பாக உலுக்கி ஓய்ந்திருக்கும் நிலையில் “ஹிஸ்புல்லா பதவி விலகினார்” என்ற ஒரு நம்ப முடியாத ஒரு ஜோக் அடித்து சொருகி விடப்பட்டது. (முஸ்லிம் அமைச்சர் ஒருவர் எங்காவது பதவி விலகுவார்ரா ?).... ஆனால் இதன் ஆயுள் காலம் வெறும் ஒரு நாளும் இல்லை...சப்பென்று ஆகிவிட்டது விசயம். இந்த அரசியல் தலைமைகளின் வாழ்வில் நாளை இன்னும் ஏதாவது திடீர் ஆச்சரியம் நடக்கலாம். ஏனெனில் ஒவ்வொரு விடியலும் இனிமையானவை....அதிசயங்களால் நரம்பியவை..



# முத்தக்காடு

அவனிடம்
ஒரேயொரு முத்தந்தரக் கேட்டபோது - அது
அவளைச் சிலிர்க்கவைக்கும் வசனமாயிருந்தது.
தவித்துப்புரளும் அலைகளை
உதடுகள் உணரவைத்தது.
விரிந்து சென்ற கனவுகள் ஊடாக
கவிதைகளை எழுதித்தந்தது.
ஒரேயொரு முத்தமென்ற வாக்கியத்தை
உலக அன்புப்பிரதி என்று மொழிந்தாள்.
காத்துக் களைத்து
மெதுமெதுவாக எழுத்துக்களாக
உதிர்ந்தது வசனம்.
முடிவிலது
வெறுமையை ஒரு நாள் விட்டுச்செல்கையிலே
அதுவொரு
குறுங் கவிதையாகவோ
சிறு கனவாகவோ போகட்டுமே என்றான்.
அவளுடலோ முத்தக்காடாய்க் கிடந்தது.

■ கதிர்பாரதி



# நட்டான்டா நாட்டிய விழா சில குறிப்புகள்


ஒளிப்படம் மயூரதனங

■ கணபதி சர்வானந்தா

கலை இலக்கியங்களுக்கூடாக நடைபெறும் உறவாடல்கள் என்றும் பெறுமதியானவை. அவை சமூகத்தில் ஆழ்மனமாற்றங்களை விதைக் கவல்லவை. இரு மொழி பேசும் இனங்கள் இணைந்தும் புரிந்தும் வாழ இன உறவைத்தூண்டும் இன உறவாடல் நிகழ்ச்சிகள் வழிவகுக்கின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளினூடாகப் பெருமளவில் கலாசாரப் பரிமாற்றங்களும் கருத்தாக்கங்களும் நடைபெறுகின்றன.

மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக நடைபெற்று ஓய்ந்து போன யுத்தத் தின் ரணங்கள் துடைக்கப்பட வேண்டுமென்பதில் அக்கறை கொண் டுள்ள கலைஞர்களின் இணைவுகளாகப் பல நிகழ்சிகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. அவர்கள் கரங்கள் சற்று ஓங்கியிருக்கின்றன என்றே எண்ணத்தோன்றுகிறது. இதனை நிரூபிக்கின்ற வகையில் அண்மைக்காலங்களில் நடை பெற்ற இன உறவைத்தூண்டும் சில நிகழ்வு களை இங்கு குறிப்பிடலாம்.

அவற்றுள், யாழ்ப்பாண பொதுநூலக மண்டபத்தில் நூல் மொழி மாற்றத்தை முன்னிறுத்தி நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவையும், கொழும்பு லயனல்வென்ற் அரங்கத்தில் நடைபெற்ற நட்டான்டா சர்வதேச நாட் டிய விழாவையும் (NATFEST 2015), கொழும்பு பிரிட்டிஷ் பாடசாலை (BRITISH SCHOOL) திரையரங்கத்தில் இன்ரர் அக்ட்ஆட் (INTER ACT ART) நிறுவனம் நடாத்திய ஐந்தாவது கொழும்பு சர்வதேச நாடகவிழா - 2016 ஐயும் சிலவாகக் குறிப்பிட விரும்புகிறேன். மேற்குறிப்பிட்ட அனைத்து நிகழ்சிகளிலும் பல்லினம் சார்ந்த கலைஞர்கள் இலக்கிய கர்த்தாக்களும், எழுத்தாளர்களும் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நட்டான்டா சர்வதேச நாட்டிய விழா (NATFEST 2015). ஆரம்ப நிகழ்வாக நட்டான்டா கலைஞர்களால் வண்ணாத்தியின் வாழ்க்கை வட்டம் என்ற அரங்க நடனம் அபிநயனப்படுத்தப்பட்டது. வண்ணாத்திப் பூச்சியொன்று முட்டையிலிருந்து வெளிவருவது தொடக்கம் வாழ்க்கைச்சுற்று வட்டத்தின் இறுதியில் அது மரணத்தை தழுவுகின்றவரையிலான இயற்கை நிகழ்வுகளை அபிநயப்படுத்திய வடிவங்கள் அற்புதத்தை தழுவிநின்றன. பரதத்தில் சிவநடனம் தருகின்ற ஒரு பிரபஞ்சக் கருத்தாடல் போன்ற செறிவான ஒரு பின்புலத்தை அந்த நடனம் எனக்கு வழங்கியதைக்கண்டேன். ஒவ்வொரு உயிரும் தனக்கான ஒரு லயத்தை அடையப் போராடும் ஒரு துடிப்பை தேர்ந்த அசைவுகளுடன் அந்த நாட்டியம் சிறப்பாக உருவகம் செய்திருந்தது. நடன வடிவங்கள் குறித்து அரங்க ஆய்வுகளைச் செய்துவரும் கபிலபலிகவர்த்தனவின் இந்த முயற்சியில் ஆடை அலங்காரமும், ஒப்ப னையும் அற்று, உடல் மொழியாலும் கதையைப் பேசலாம் என்ற அதிசயத்தை கண்டேன்.

அடுத்ததாக கிழக்கிலங்கையில் தொன்றுதொட்டு பேணப்பட்டுவரும் பண்டைய கிராமியக் தமிழ்கூத்து நடன வடிவங்களையும், அதன் வரலாற் றையும் மற்றும் அரங்கச் செயற்பாடுகளையும் குறித்தும் சிறப்புற ஆய்வுகளை மேற்கொண்டுவரும் பேராசிரியர் மௌனகுருவின் படைப்பான காண்டவத கனம் மேடையேற்றப்பட்டது. படைப்பினில் மரபுக்கு புதுப்புது அர்த்தத்தை வழங்கக்கக்கூடிய நவீன செயற்பாடுகள் செறிந்து கிடந்தன. அவர் தம்படைப் பில், சமகாலப் பிரச்சினையைத் தொன்மங்களோடு இணைப்பாக்கம் செய்து காட்டுகிறார். அவரின் நிகழ்ச்சியில் பதிவாக்கம் செய்யப்பட்ட ஒலி நாடாக்களோ அல்லது குறுந்தகடுகளோ ஒலிவி தானம் செய்வதில்லை. மாறாக அரங்கக்கலைக்கு இயல்பினைச் சேர்க்கும் வகையில் கலைஞர்களே, பின்னணி இசையையும் வழங்கியதைக கண்டேன்.

நாட்டியமும், நடனமும் வாழ்வியல் குறித்த அழகுணர்வையும் புரித லையும் மேம்படுத்துகின்றன. மனதின் பரவசங்களை அபார பயிற்சிகளினால் தேறிய உடல் மொழியினூடாக நிகழ்த்திக்காட்டும் ஒரு வசீகர அழகியல் கலையென நாட்டியமும், நடனமும் வர்ணிக்கப்படுகின்றன. இத்த கைய கலை வடிவங்களை தமது குறிக் கோளாகக் கொண்டு செயற்பட்டுவரும் நட்டான்டா நிறுவனர் கபிலபலிகவர்த்தனவும், மட்டக்களப்பு அரங்க ஆய்வு கூடத்தின் நிறுவனர் பேராசிரியர் மௌனகுரு, இன்ரஅக்ட்ஆட் நிறுவனத்தைச் சேர்ந்த சபீர்மற்றும் திருமறைக்கலாமன்ற அரங்க ஆற்றுகைக் கலைஞர்கள் ஆகியோர் போற்றத்தக் கவர்கள். இத்தகைய செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாண அரங்கக் கலைக் கழகம் கடந்த ஒரு வருடகாலமாக முன்னெடுத்து வருவதென்பது குறிப்பிடத்தக்கது.

---

# அரங்கை வளர்க்கும் கலைக்கழகம்



இன்றைய காலகட்டத்தில் தமிழர் பிரதேசங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் அரங்கு சார் நிறுவனங் களில் யாழ்ப்பாணம் அரங்கக்கலைக் கழமானது பலராலும் பேசப் படக்கூடிய ஒரு அரங்க நிறுவனமா கத் திகழ்கின்றது. 2000 ஆண்டு காலப் பகுதியில் இருந்து பாடசாலைசார் அரங்க நிகழ்வுகள், பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் போன்ற செற்பாடுகளில் பெயரிடப்படாத வகையில் முழு நேரமாகத் தன்னை ஈடுபடுத்தி வந்ததி. தர்மலிங்கத் தின் சிந்த னையின் வெளிப்பாடாக 2008ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப் பாணம் அரங்கக் கலைக் கழகம் எனும் பெயருடன் செயற்பட்டு 2011ஆம் வருடம் பதிவு செய்யப்பட்ட ஒரு அரங்க நிறுவனமாகி, 2015ம் வருடம் மார்கழி மாதம் 6ஆம் திகதி அன்று அங்குரார்ப்பண நிகழ்வுடன் யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழகம் எனும் பெயர்ப்பலகை தாங்கி, முகவரிஇல 66 உயரப்புலம் ஆனைக்கோட்டை எனும் கவரியில் இயங்கி வருகின்றது. யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகத் தின் இன்றைய செயற்பாடுகளாக நாடக ஆற்றுகை கள், அரங்க மற்றும் திரைப்படக் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், விழிப்புணர்வு சார் தெருவெளி நகழ்த்துகைகள், குறும் திரைப்படம், விவரணத்திரைப்படத் தயா ுப்புக்கள், பாடசாலை சார் அரங்கச் செயற்பாடுகள், கோமாளி அரங்கச் செயற்பாடுகள், சிறுவர் நாடகங்கள் போன்ற அரங்க - திரைப்படம் சார் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

யாழ்ப்பாணம் அரங்கக் கலைக்கழக நிகழ்த்து கைகள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது மட்டுமன்றிப் பிற மாவட்டங்களான திருகோணமலை, கொழும்பு, கதிர்காமம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகமானது 2016ம் ஆண்டில் இருந்து பிரதி ஞாயிறு தோறும் WELCOME TO SUNDAY SHOW எனும் பெய ுல் நாடக ஆற்றுகைகளை நிகழ்த்தி வருகின்றது. அதனடிப்படையில், அவலம், நுளம்பு, கறள், வரைவாளி, கருச்சிதைவு, அகால நலம், அரும்புமற்றும் குழந்தை ம. சண்முகலிங்த் தின் எந்தையும் தாயும் போன்றன அரங்கக் கலைக்கழகத்தின் உள்ளக மற்றும் வெளி அரங்கில் மேடையேற்றப்பட்டன.

அதேபோன்று யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகம் தனது திரைத் தயாரிப்புக்களாக ஏன், வன்மம், HEALTH COMMINICATION, வடு, கெடு, காவு போன்ற குறும் படங்களையும்,

சத்தியமே யெயம் எனும் ஒளிப்படத்தினையும், பொன்வண்டு எனும் ஆவணப்படத்தினையும் தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு யாழ்ப்பாணம் அரங்கக் கலைக் கழகம் தனது அரங்கச் செயற்பாடுத்தி பல்வேறு பட்ட தளங்களில் செயற்பட்டு வருவதோடு அனைத்து தரப்பினரையும் உள்வாங்கும் ஓர் அரங்க கற்றலுக்கும் ஆற்ற்லுக்குமான ஓர் வெளியாக திகழ் கின்றது.

# சாதனை புரியும்

## யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்





### அறிமுகம்

1912 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் விஜயதசமி நன் நாளில் சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்து தற்போது அரச தரப்படுத்தல்களின் படி தரம் - 01 பாடசாலையாகவுள்ளது. 2012 இல் தன்னுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடி இரண்டாவது நூற்றாண்டினுள் நுழைந்துள்ளது. சரஸ்வதி மகா வித்தியாலயம். பாடசாலையின் நூற்றாண்டை ஆவணமாக்கும் பொருட்டு சரஸ்வதி தீப மலர் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதுதரம் 1-5 வரை 274 மாணவர்களும் தரம் 6-13 வரை 464 மாணவர்களுமாக மொத்தமாக 738 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு 35 ஆசிரியர்கள் கல்வி போதிக்கின்றனர்.



### சாதனைகள்

பாடசெயற்பாடுகளைப் பொறுத்தவரையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015 இல் 8 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 77 மாணவர்கள் 70 புள்ளிக்குமேல் பெற்றுள்ளமை ஒரு சாதனையாகும்.

க.பொ.த சாதாரண பரீட்சையில் மாணவர்களின் பெறுபேறு சற்றுக் குறைந்திருந்தாலும் உயர் தரம் கற்கக் கூடிய குறிப்பிடத்தக்க மாணவர்கள் வருடாந்தம் சித்தியடைகின்றனர். 2014 ஆம் ஆண்டு செல்வி அபர்ணா ஞானசேகரம் 9A பெற்று சாதனைபடைத்துள்ளார். இவர் சிறந்த வலைப் பந்தாட்ட வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. க.பொ.த உயர் தரம் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது. கலைத்துறை மட்டுமே காணப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு சித்தி வீதம் 80 ஆகும். வருடாந்தம் ஒரு சில மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் தெரிவாகியுள்ளனர்.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரை 2002 ஆம் ஆண்டிலிருந்துவலைப்பந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டுதேசியமட்டத்தில் பங்கு பற்றும் நிலைமையைஅடைந்துள்ளது. இந்த ஆண்டு 15, 17 வயது வலைப்பந்தாட்ட அணியினர் மாகாணமட்ட சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டு தேசியமட்டத்தில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.மேலும் மேசைப் பந்தாட்டத்தில் 15 வயது ஆண்கள் மாகாணமட்டத்தில் 3 ம் இடத்தைப் பெற்று தேசியமட்டத்தில் பங்குபற்றுவதும் குறிப்பிடத்தக்கது. விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் திரு.ர.சிறிரமணனின் பங்கு அளவிடப்பட முடியாதது ஆகும். இவரின் முயற்சியால் விளையாட்டுத்துறை பெருவளர்ச்சி அடைந்துள்ளது.



### சவால்கள்

ஏனைய அரசபாடசாலைகள் போலவே நவீன யுகத்தின் சவால்களை கல்வி சார்பில் பாடசாலை எதிர்கொள்கின்றது .

மத்திய கல்வி அமைச்சினால் “அருகிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை” திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதால் எதிர்காலத் தேவைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய மாணவர் சங்கத்தைக் கட்டி எழுப்பி அராலிப்பகுதியில் ஒரு முன்மாதிரியான பாடசாலையாகத் திகழ வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. என்று அதிபர் தெரிவிக்கின்றார் .

நகரங்களில் டொனேசன் கலாசாரங்களுக்குள் அபரிமிதமான பணத்துடன் இயங்கும் பாடசாலைகளில் இருந்து வெளியேறும் மாணவர்களுடன் கிராமப் பாடசாலைகளில் இருந்து செல்லும் மாணவர்களும் போட்டிச் சூழலில் ஒரே தளத்தில் நிறுத்தப்படுகின்றனர். எனினும் இத்தகைய பாடசாலைகள் கொடுக்கும் அறிவும் உணர்வும் புத்தாக்க திறன் மிக்க மாணவர்களை உருவாக்குகின்றது. நகரப் பாடசாலைகளில் இத்தகைய மாணவர்ளை உருவாக்குவதில் யதார்த்த தியான சிக்கல்கள் உள்ளன. இவ்வகையில் சமூக இருப்பை கட்டியெழுப்ப நாட்டிற்கு இத்தகைய கிராம பாடசாலைகளின் பங்கு முக்கியமானது.

# திருமறைக் கலாமன்றத்தின் கூத்துக் கலைக் கூடல்



இம் மாதம் சனி,ஞாயிறு தினங்களில் திருமறைக் கலாமன்றம் நடத்தும் கூத்து விழா கூத்துக் கலைக் கூடல் என்னும் பெயரில் எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) இல, 238 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட மரபு வழிக்களரியில் நடைபெறவுள்ளது.

கூத்துக்கலைக் கூடலின் முதல் நாள் நிகழ்வுகள் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். முதல் நாள் நிகழ்வுகளின் அரங்க அளிக்கைகளாக முல்லைத்தீவு, முள்ளியவளை காட்டா விநாயகர் கலாமன்றம் வழங்கும் கோவலன் கூத்து (முல்லைமோடி), சுழிபுரம், அண்ணா முத்தமிழ் கலைக் கலா நாடக மன்றம் வழங்கும் தர்மபுத்திரன் (வடமோடி நாட்டுக்கூத்து), கட்டுவன், சிவப்பிரகாசம் குழுவினர் வழங்கும் வசந்தன் கூத்து ஆகியன இடம்பெறவுள்ளன.

கூத்துக் கலைக்கூடலின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை காலை 9.00 மணிக்கு இல. 286 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகும்.

இதன் போது கூத்து தொடா்பான கருத்தமா்வும், கண்காட்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக அற்றைத் திங்கள் கூத்துருவ நாடக நூல்வெளியீடும் அதனைத்தொடர்ந்து அரங்க அளிக்கைகளும் இடம் பெறும். இதன் போது மட்டக்களப்பு, கன்னங்குடா பருத்திச்சேனை, கலைமகள் கலைக்கழகம் வழங்கும் அலங்கார ரூபன் (தென்மோடி நாட்டுக்கூத்து), மன்னார், பேசாலை விழிகள் கலாமுற்றம் வழங்கும் இராமபாணம் (மாதோட்டப்பாங்கு), திருமறைக் கலாமன்றம் வழங்கும் எஸ்தாக்கியார் (தென்மோடி நாட்டுக்கூத்து) ஆகியனவும் இடம் பெறவுள்ளன.



# மைதானத்துக்கு மறுவாழ்வு

தமிழரசன்

யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத்துறை வரலாற்றில் ஜூன் 18 சிறப்பான நாள். சர்வதேசதரத்தில் அமைக்கப்பட்ட துரையப்பா பொதுவிளையாட்டு மைதானத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைக்கிறார். சர்வதேச தரத்தில் வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ள இந்த மைதானம் சர்வதேச தரத்திலான பல வீரர்கள் உருவாகும் வாய்ப்பை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

எம்மைக் கடந்துபோன யுத்தம் அழிவுகளை, அங்கவீனர்களை மட்டும் ஏற்படுத்தவில்லை. பல முயற்சிகளையும் - முயற்சியாளர்களையும் - சாதனையாளர்களையும் முடக்கியும் சென்றது. விளையாட்டுத்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. யுத்த காலத்தில் தொடர்ந்த வசதியீனம் - நேற்று வரை தொடர்ந்த நிலையிலும் கூட வடக்கின் வீரர்கள் பல சாதனைகளைப் பதிவு செய்தனர்.

உதாரணமாக கோலூன்றி பாய்தலில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் அனித்தா தேசிய அளவில் சாதனை படைத்திருந்தார். இவர் தவிர அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் பவித்திரா, காவேரி போன்றவர்களும் தேசிய ரீதியிலான கோலூன்றிப் பாய்தலில் பதக்கங்களை தொடர்ந்து பெற்று யாழ்ப்பாணத்துக்கு பெருமை சேர்த்திருந்தனர்.

இவர்களைப் போன்று கடந்த காலத்தில் பல வீரர்கள் தேசிய ரீதியில் தடகள விளையாட்டில் சாதனைகளை படைத்திருந்தனர். இவ்வாறு சாதித்த பலருக்கு சர்வதேச ரீதியிலான போட்டிகளில் பங்கேற்க சந்தர்ப்பங்கள் வாய்த்தன. இவற்றில் அவர்களால் குறிப்பிடத்தக்களவு பிரகாசிக்க முடியவில்லை.

காரணம் சர்வதேச தரத்திற்கு ஏற்ற விதத்திலான பயிற்சிகள் கிடைக்காமையும் அப்பயிற்சிகளை பெறுவதற்கான களம் அமையாமையுமே. தேசிய ரீதியிலான போட்டிகளில் கூட இதே நிலைமை தொடர்ந்தபோதும் வீரர்கள் சமாளித்த போதும் சர்வதேச மைதனங்களில் அது முடியாமல் போனது.

எனினும் இன்று யாழ்ப்பாணத்தின் வீரர்களுக்காக கையளிக்கப்படும் மைதானம் வீரர்களின் பயிற்சிக்கும் விளையாட்டு போட்டிகளுக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

ஏனெனில் கடந்த காலங்களில் இராணுவ களியாட்ட நிகழ்வுகள், இசைக் கச்சேரிகள், பிரசாரக்கூட்டங்கள், கண்காட்சிகள், யாழ்ப்பாணத்துக்கு அரச தலைவர்களின் ஹெலிகொப்டர் இறங்குமிடம் என்பவற்றுக்காக துரையப்பா விளையாட்டு அரங்கு பயன்படுத்தப்பட்டது. அப்போதைய ஆட்சியாளர்களின் சர்வாதிகாரப் போக்கும், வருமானம் ஈட்டுவதற்காக யாழ். மாநகர சபை கொடுத்த அனுமதிகளுமே துரை யப்பா விளையாட்டரங்கின் உருக்குலைவிற்கு காரணமானதாயிற்று.

பந்தல்கள் அமைக்க, மேடைகள் அமைக்க குழிகள் தோண்டப்பட்டன. தவிர முறையான மைதானப் பராமரிப்பும் இருக்கவில்லை. இதனால் மைதானத்தைப் பயன்படுத்தும் வீரர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இனியும் இவ்வாறான நிலை ஏற்பட்டால் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஓடுதளம் சேதமடையும். இதை சீர்செய்ய பெரும் தொகை தேவைப்படும்.

முன்னைய அரசு சுகததாஸ விளையாட்டரங்கில் களியாட்ட விழா நடத்த அனுமதித்தது. இதனால் அந்த மைதானம் எதிர்கொண்ட சேதங்கள் அதிகம். கிடைத்த வரும்படியிலும் பார்க்க மைதானத்தை சீராக்க அது கொடுத்த விலை கூடுதலானது. இதனை அனுபவமாகக் கொண்டு துரையப்பா மைதானத்தை பொறுப்பேற்றிருக்கும் மாவட்ட விளையாட்டுத்துறை செயற்பட வேண்டும்.

தொடர்ச்சியான பயிற்சிகளே வீரர்களை சாதனையாளர்களாக உருவாக்கும் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் விளையாட்டுத்துறையினர். வளங்களைப் பெற்று அவற்றைப் பயன்படுத்தாது வெறுமனேவிடும் யாழ்ப்பாணத்தின் நிர்வாகங்கள் போன்று செயற்படாது, தினம் வீரர்கள் பயிற்சி பெறும் களமாக துரையப்பா மைதானம் திகழ வேண்டும்.

இதற்கான நிர்வாகத்தை முன்னெடுக்கவும் - சாதனை வீரர்கள் உருவாகவும் - நாம் எதிர்பார்க்கிறோம்.

# மரமாகி நின்றாள்



1.

கானகத்தே
காதலியைக் கைப்பிடித்தேன்
காரிருள் இருக்கவில்லை.
கானகத்தை விட்டு
நான் மரமாகி வந்தேன்
அவள் மரமொன்றின் உரமாகி
இருந்தாள்

2.

மகனின் தலைகோதும்
கைகளில்
அவளின் இரத்தம் பிசுபிசுக்கிறது

3.

அவள் என்னிடம் சொன்னது ஞாபகம்
வந்தது

'எங்களுக்கு நடுகற்கள்
இருக்கா எங்களுக்கு
சுடுசொற்கள்தான் இருக்கும்

ஒரு கல்லுக்குப் பூவை வைத்து
அழாதீர்கள்

விளக்கேற்றி உங்கள் நீரூற்றாதீர்கள்

பூக்கன்று ஒன்றை என் நனைவாய்
வையுங்கள்

உங்கள் கண்ணீர் ஊற்றுங்கள்

பூக்கள் வைத்து அழுகிறீர்கள்
என்று யாரும் சொல்ல மாட்டார்
அஞ்சாதீர்கள்

மகனின் கண்களில் பூக்களால்
ஒத்தியெடுங்கள்

அவனை அப்போது நான்
முத்தமிடுவேன்'

4.

அவள் சொல்லும்போது
அவள் வாய் பொத்தினேன்

இப்போதும் வாய் பொத்துகிறேன்
அழுகை வெடிக்கிறது

த.அஜந்தகு[illegible]

10.02.2[illegible]16

# பனித்தேச வடலி



கபிலன்

**போ**ரின் காரணமாக எந்நேரமும் இறக்கலாம் என்ற பயத்தில் சொந்த நாட்டைவிட்டு வெளியேறுவது, இன்னொரு நாட்டில் நல்லவாழ்க்கை அமையும் என்ற நம்பிக்கையில். பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைந்த ஒருநாட்டில் பணம் சம்பாதிப்பதை தவிர வேறெந்த நோக்கத்தில் அவர்கள் குடியேறியிருக்க முடியும்?
இந்த எதிர்பார்ப்புகளுடன் இடம் பெயர்ந்து அடுத்து என்ன செய்யப்போகின்றோம் என்ற எந்த திட்டமும் இல்லாமல் வந்த எனது அப்பாவின் வயதையொத்தவர்களிற்கு காத்திருந்தது என்னவோ ஏமாற்றம் மாத்திரமே. முதலாவது தடைக்கல்லாக இந்நாட்டுமொழி இருந்தது.
ஆங்கிலமும் அவர்களிற்கு சரளமாக தெரிந்திருக்கவில்லை. உலக பொது மொழியான சைகைமொழியே கை கொடுத்தது.
பலசரக்குகடைகளில் கோழி வாங்க சென்றவர்கள் முட்டையை காட்டி "மதர்" எங்கே என்று கட்டைவிரலை உயர்த்தி காட்டியிருக்கின்றார்கள். அல்லது "கொக்கரக்கோ" என்று கத்தி கேட்டிருக்கின்றார்கள்.
அவர்களின் வாயிற்குள் நுழையாத இந் நாட்டு ஊர்ப் பெயர்கள் எல்லாம் தமிழாக்கம் பெற்றன. சிந்தழகி (Schindellegi), எசக்கபுசக்கே (Herzogenbuchsee), சுவாமிலிங்கன் (Schwamendingen) அல்லது புக்கைபிளச்(Bucheggplatz) என்றுதங்களின் வசதிக்கேற்ப மாற்றிக்கொண்டார்கள்.
ஊரிலிருந்து வெளியேறும் போது அங்கிருந்த சொத்துக்களை வித்தோ அல்லது கடன் வாங்கியோ வெளியேறியவர்களே எனது அப்பாவின் தலைமுறை. வெளிநாடு வந்ததும் அந்தக் கடனை அடைப்பதே அவர்களின் முதல் குறிக்கோளாகஇருந்தது.
சமநேரத்தில் அவர்கள் விட்டு வந்த குடும்பத்தின் பொருளாதாரத்தையும் சுமக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். அவர்களின் தேவைகள் அனைத்தும் பணத்தைச் சுற்றியதாகவே இருந்தது. குடியேறிய நாட்டிலோ மொழியறிவு இல்லாமல் பணம் சம்பாதிப்பது அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை இன்னும் சிக்கலாக்கியது. குடியேறிய நாடு மொழியை முதலில் படித்து தங்களுடன் ஒத்துவாழுஎன்றது. குடியேறிய் நாட்டிற்கும் அவர்களிற்குமான முதல் முரண்பாடு இதுவே.
பதின்பருவத்தில் இங்கு வந்து கல்வி கற்க விரும்பியவர்களை நான் சந்தித்திருக்கின்றேன். அவர்களின் பொருளாதார சூழல் அன்றைய காலகட்டத்தில் இடம் கொடுக்கவில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவசக் கல்விக்கான வயதினை இங்கு வந்து சேரும் போது கடந்திருந்தார்கள். மேற்கொண்டு தொழிற்கல்விபடிப்பதாக இருந்தால் அதற்கு அவர்கள் சொந்தமாகப் பணம் கட்டியேபடிக்க வேண்டியிருந்தது.
இந்நாட்டு கல்விமுறையை தமிழ் பெற்றோர் ஏனைய நாட்டில் வாழும் தங்களின் உறவினர்களின் பிள்ளைகளின் கல்வி முறையுடன் ஒப்பிட்டு பார்க்க ஆரம்பித்தன் விளைவு எனது தலைமுறைக்கு பெரும் தலையிடியாக அமைந்தது. ஊரில் இருந்த கல்விமுறைக்கு பழக்கப்பட்டவர்களிற்கு இந்நாட்டுகல்வி முறையை புரியவைப்பதென்பது பெரும் சிக்கலாக இருந்தது. ஏன் எனக்கே அது முழுவதுமாகப் புரிந்திருக்கவில்லை.
சுவிஸ் நாட்டுக்கல்வி முறை என்பது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தனித்துவமானது. இங்கே அடிப்படை கல்வி என்பது அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது. 12-13 வயதுவரை அனைத்து மாணவர்களுக்கு அடிப்படைக் கல்விஒன்றே (Primarschule). அதன் பின்னர் அவர்களின் கல்விகற்கும் திறனிற்கு ஏற்ப (அறிவிற்கு ஏற்பவல்ல) 3 அல்லது 4 வகையாக, (மாநிலங்களை பொறுத்தது), பிரித்து விடுவார்கள் (1. Gymnasium, 2. Sekundarschule, 3. Realschule, 4. Werkschule). சில மாநிலங்களில் இதன் பெயர்களும் மாறும்படும். நான்காவது பிரிவில் கல்வியில் பலவீனமானவர்களை இணைத்து விடுவார்கள். பயிற்றப்படும் பாடங்கள் அனைத்து பிரிவினருர்க்கும்ஒன்றாக இருந்தாலும் அதன் ஆழம் வேறுபட்டதாக இருக்கும். முதலாவது பிரிவிற்கு சென்ற பிள்ளைகளை தமிழ்ச் சமூகமும் பெற்றோர்ரும் அறிவாளிகளாகக் கொண்டாடினர்.

(இன்னும் வரும்)

**சு**விட்சர்லாந்து (Switzerland) அல்லது சுவிஸ், நிலப்பகுதிகளாலும், ஆல்ப்ஸ் மலையாலும் சூழப்பட்ட மத்திய ஐரோப்பிய நாடு. இதன் வடக்கே ஜேர்மனி, மேற்கே பிரான்ஸ், தெற்கே இத்தாலி, கிழக்கே ஆஸ்திரியா மற்றும் லிக்டன்ஸ்டைன் ஆகிய நாடுகள் எல்லைகளாக உள்ளன. சுவிட்சர்லாந்து வரலாற்று நோக்கில்ஒரு கூட்டமைப்பு. ஆனால் 1848 முதல்ஒருங்கிணைந்த தனிநாடாக உள்ளது. 41,285 சதுரகிமீபரப்பளவில் தோராயமாக 8 மில்லியன் மக்கள் தொகை (2015) கொண்ட நாடு. இது மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போதுபரப்பளவில் 136ம் இடத்தில்உள்ளதுடன் இந்நாட்டின் நீர்ப்பரப்பு நிலப்பரப்புடன்ஒப்பிடும் பொழுது 4.2% மாகவும் உள்ளது. சுவிட்சர்லாந்து 26 மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சிகுடியரசு ஆகும்.

கூட்மைப்பின் அதிகாரத் தலைமையிடமாக கரமும் நாட்டின் பொருளாதார மையங்களாகஇதன் இரண்டு உலகளாவிய நகரங்களான ஜெனீவாவும் சூரிச்சும் திகழ்கின்றன. சுவிட்சர் லாந்து, ஒரு நபருக்கான மொத்தஉள்நாட்டு உற்பத்தியின்படி, உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக உள்ளது. சுவிட்சர்லாந்து நீண்ட நடு நிலைத்தன்மையுடைய வரலாற்றினைக் கொண்டது.

1815 இலிருந்து இது சர்வதேசளவில் எந்த போரிலும் பங்குபெறவில்லை. உலகின் மிகவும் தொன்மையானமக்கள் ஆட்சியைக் கொண்ட நாடாக சுவிட்சர்லாந்து விளங்குகிறது. அது மட்டுமல்லாமல் உலகிலயே பிரதமருக்கு ஒரேஒரு ஆண்டு பதவிக்காலம் கொண்ட நாடு இதுமட்டுமே. ஜேர்மன் (டொச் மொழி என்றும் அழைப்பார்கள்), பிரெஞ்சு, இத்தாலி மற்றும் றேத்தோரொமனிஸ் (Rtoromanisch) ஆகிய நான்கு தேசிய மொழிகள் கொண்டது.



கட்டுரையாளர் தன்னுடைய ஒன்பது வயதிலேயே தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்து தற்போது சுவிஸில் வசிக்கும் இரண்டாம் தலைமுறைப் புலம்பெயரி. தனது புலம்பெயர் வாழ் அனுபவங் களை ஊடுபாவும் சொற்களினூடே வெளிப்படுத்த முனைகிறார்.

# ஆறாவது

## தொடர்கதை



நீர் கொழும்புக்கு அருகேயான கடற்கரையில் குந்தியிருந்து இத்தாலிக்கு எந்த ரூட்டால் போவது என்று அவன் யோசித்துக் கொண்டிருந்த போது இரவாகியிருந்தது. உப்பும் குளிரும் சேர்ந்த மெல்லிய காற்று முகத்தில் வருடியபடியிருந்தது. கடலின் வாசம் சூழவும் நிறைந்திருந்தது. போட்டிருந்த சேட்டினுள் காற்று நுழைந்து முதுகில் டப் டப் என்று சட சடத்தது. தண்ணீரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிச்சங்கள் தெரிந்தன. அவனுக்கருகில் சிறியதொரு ட்ரவலிங் பை இருந்தது. அதற்குள் மூன்று செட், மூன்று ஜீன்ஸ் , இரண்டு சாறம், பத்து ஜட்டி, ஒரு பனடோல் கார்ட், ஒரு அல்பம். அல்பத்தில் இருபத்தியிரண்டு அம்மாவின் படங்கள். இரண்டு அகிலாவின் படங்கள்.

01

இவன் இத்தாலிக்குப் புறப்பட்டு நீர் கொழும்புக் கடற்கரைக்கு வருவது இது மூன்றாவது தடவையாகவும் அனுப்பி வைத்த ஏஜெண்டுக்கு முழுக்காசைக் கட்டி இது மூன்றாவது மாதமாகவும் இருந்தது. காசைக் கட்டிய இரண்டாவது நாளே ஏஜெண்டிடம் இருந்து இவனுக்கு ரெலிபோன் அழைப்பு வந்தது. "இண்டைக்கு ஏத்தப் போறம். வாகனம் வரும். ரெடியா இரு'' என அவன் சொல்லியிருந்தான். சுறுசுறுப்பும் வெளிநாடொன்றுக்குப் போகப் போகின்ற குறுகுறுப்பும் திரும்பவும் இவனுக்குள் ஓடத் தொடங்கின. அகிலா கொட்டகேனாவில் உள்ள அம்மன் கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்து கொண்டு வந்து கொஞ்ச விபூதியையும் குங்குமத்தையும் ட்ரவலிங் பை பொக்கெட்டுக்குள் வைத்து இவனுக்கும் பூசி விட்டு "இந்த முறை எல்லாம் சரி வரும் '' என்றாள்.

> "தம்பி தெரியும் தானே. கடற் பயணங்கள் எதுவும் சொல்லிக் கொண்டில்லை. உங்களை ஏத்துற கப்பல் வந்து சேரவில்லை. எல்லாம் சரி வந்தவுடன நான் திரும்ப கோல்பண்ணுறன்."

இவன் ரிப் ரொப்பாகத் தயாராகி வாகனம் வருமென்று பார்த்துக் கொண்டு நின்றான். அது வரவில்லை. இருட்டிய பிறகு ஏஜென்சியிடமிருந்து திரும்பவும் அழைப்பு வந்தது. "தம்பி தெரியும் தானே.கடற் பயணங்கள் எதுவும் சொல்லிக் கொண்டில்லை. உங்களை ஏத்துற கப்பல் வந்து சேரவில்லை. எல்லாம் சரி வந்தவுடன நான் திரும்ப கோல் பண்ணுறன் '' என்றவன் அடுத்த பதினைந்து நாட்களுக்கு கூப்பிடவேயில்லை. இவன் அழைத்தாலும் சுவிச் ஓப் என தகவல் வந்தது .அங்கிங்கென்று விசாரித்துப் பார்த்தும் ஆள் சிக்கவில்லை.

"முழுக் காசையும் கட்டிய நீ ஒரு மொக்குப் பயல் தான்'' என்று ஆட்கள் இவனைத் திட்டினார்கள். "இத்தாலியில் இறக்கினாப் பிறகு தான் காசு'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசியிருக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். இவன் அப்படிப் பேசியிருக்காதவன் அல்ல.

"அண்ணை, முழுக்காசையும் பாங்கில அகிலாவின்ர எக்கவுண்டுல போட்டுட்டு பாஸ் புத்தகத்தை உங்கட கையில தாறன்.நான் இத்தாலியில இறங்கின உடன அகிலா முழுக் காசையும் எடுத்து கையில தருவா" என்று இவன் பேசித் தானிருந்தான். ஆனால் ஏஜென்சி அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

"நான் இதை ஒரு தொழிலாச் செய்யேல்ல. எனக்கு எண்ட வருமானத்துக்கு ஆயிரத்தெட்டு வழியிருக்கு, இதை எங்கட பிள்ளையளுக்கு ஒரு சேவையைத் தான் செய்யிறன். ஆனா இதில இலங்கைப் பொலிசில இருந்து சோமாலியாக்காரன் எகிப்துக்காரன் எண்டு கனக்கப் பேர் இன்வோல்வ் ஆகியிருக்கினம். அவைக்கு நான் கதை சொல்ல முடியாது" என்றான் அவன்.

(வலிகள் இன்னும்...)

■ சயந்தன்

---

# கோழிக்குஞ்சு

எங்கள் அலுவலகத்துக்கு கீழ இருக்கின்ற பிளாட்ஃபோர்மில் ப்ரொய்லர் கோழி குஞ்சுகளை ஒருவர் விற்றுக்கொண்டிருந்தார். தீனி தின்று கொழுத்து நாற்பது நாட்களுக்கு மேல் உயிர்வாழாத கோழிகள் அவை. நேற்றைய தினம் அதே இடத்தில் விற்றுக்கொண்டிருந்தார். எத்தனை பேர் வாங்கினார்கள் என்று தெரியாது. அலுவலகம் முடிய நான் பேருந்துக்கு பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் இரண்டு சிறுவர்கள் அந்தக் கோழிக்குஞ்சு கடையை சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். சகோதரர்களாக இருக்கலாம். அதில் இளையவனாகப்பட்டவன் குஞ்சு ஒன்றின் விலை கேட்டான். இருபத்தி சொச்சம் சொன்னதாக காதில் விழுந்தது. ஒரு குஞ்சு வாங்கித்தரும்படி அண்ணனை நிச்சரித்தான். அண்ணனுக்கும் அதிக வயது இருக்காது தான். ஆனால் நாற்பது நாள் விடயம் தெரிந்தவனாக தம்பிக்கு விளக்கம் சொன்னான்.

"நாப்பது நாள்ல செத்திரும்டா தம்பி"
"நான் என் கட்டில்லயே வச்சிருப்பேன். சாவாது"

ஒன்றை வாங்கி கொஞ்சிக்கொண்டே போனான் சின்னவன். குழந்தைகள் உலகம் தான் எவ்வளவு அழகானது. இந்தக் குஞ்சு மட்டும் விதிவிலக்காக இருந்து நாற்பது வருடங்கள் வாழ்ந்துவிடக் கூடாதா?



■ கிஷோகிர் ஸ்ரெனிஸ்லஸ்

---

## சொல்லுங்கள் - வெல்லுங்கள்

போட்டி இலக்கம் - 01

கீழுள்ள வினாவுக்கு விடையை எழுதி அனுப்புங்கள். சரியான விடைஎழுதும் ஐவருக்கு பணப்பரிசு காத்திருக்கிறது. பலர் சரியான விடையை எழுதி அனுப்பியிருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

வினா -

**புதுவிதி சஞ்சிகையின் இலச்சினையில் மறைந்திருக்கும் தமிழ் அறிஞர் யார்?**

முதற்பரிசு - ரூபா. 2000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 1500.00
மூன்றாம் பரிசு - ரூபா. 1000.00
ஆறுதல் பரிசுகள் - ரூபா. 500.00 இருவருக்கு

**முடிவுத்திகதி: 28.06.2016**

அனுப்பவேண்டிய முகவரி:

"சொல்லுங்கள் வெல்லுங்கள்" - 01

⇨ புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# எப்பிடி இருந்தவர்... ?

கிளிநொச்சியில் உள்ள சிறுவர்கள் காப்பகம் ஒன்றைச் சேர்ந்த சிறுமிகள் பாடசாலைக்கு சென்று வரும்போது அந்தப் பக்கத்திலுள்ள குரங்குகளின் தொல்லை தாங்க டியவில்லையாம். இந்தப் பிள்ளைகள் தனியே வரும்போது ஓடி வந்து அடிப்பதும். பிராண்டுவதும், இதனால் பிள்ளைகள் வெருண்டோடி விழுந்து காயங்களுக்கு உள்ளாவதும் சதா தொல்லையாகிப்போய் விட்டது. "பள்ளிக்கூடம் விட்டு வரும்போது கூட்டமாக சேர்ந்து வாங்கோ" - என்று சொல்லிவிட்டாலும் அவ்வப்போது இந்த குரங்குகள் கொடுக்கும் தொல்லைகளிலிருந்து பிள்ளைகள் படும்பாடு பெரும்பாடாகி விட்டது.



இது குறித்து மாணவிகள் செய்த முறைப்பாட்டையடுத்து இதற்கு தீர்வு காணவென காப்பகத்தை தற்போது நிர்வகிக்கும் அந்த முன்னாள் ஆயுத கொள்வனவாளர், கிளிநொச்சி வனவள பாதுகாப்பு திணைக்கள அலுவலகத்துக்கு சென்று இந்த குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த உதவுமாறு கேட்டிருக்கிறார்.

"இரண்டுகால் குரங்குகள் எண்டால் பொலிஸிட்ட சொல்லலாம். நாலுகால் குரங்கெண்டால் எங்களாலையும் ஒண்டும் செய்யேலாது . உங்களுக்கு ஏதும் ஐடியா இருந்தா சொல்லுங்கோ" என்று கேட்டிருக்கிறார்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

"மிருகங்களை மிரட்டுவதற்கென்று பிரத்தியேமாக ஒரு வெடி இருக்கிறதே. அது உங்களிடமிருந்தால் தாருங்களேன். அவற்றை எறிந்து இரண்டாரு தடவை மிரட்டிவிட்டால் பிறகு இந்தக் குரங்குகள் பயந்து இஞ்சால வராது" என்று கூறியிருக்கிறார் நிர்வாகக்குமரன் அதெல்லாம் இப்ப எங்களிடம் இல்லை" - என்று சாக்கு சொல்லி அனுப்பிவிட்டார்களாம் அதிகாரிகள்.

காலபகவான் மிகவும் பொல்லாதவர். உங்கள் வாழ்க்கை ழுவதும் லுமாலா சைக்கிளில் குறுக்க மறுக்க ஓடித்திரிந்து சன்னதம் கொட்டுவதில் கெட்டிக்காரர்.

எத்தனை ஆட்லறிகள், எத்தனை விமான எதிர்ப்பு ஏவுகணைகள், எத்தனை வகைதொகையான ஆயுதங்கள் என்று வாங்கி வாங்கி கொட்டிய -புலிகளின் ன்னாள் ஆயுதக் கொள்வனவுக்கு பொறுப்பானவராக இருந்தவரை இன்று ஒரு குரங்குக்கு கொழுத்திப்போடும் வெடி வாங்கக்கூட டியாதளவுக்கு காலம் கொண்டுவந்துவிட்டிருப்பதுதான் போரின் பின்நிவீனத்துவ பிரளயம்.

■ தெய்வீகன்

## 03 ஆம் பக்க தொடர்ச்சி

இலங்கை சுதந்திரமடைந்ததை அடுத்து, 1952 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவம் இங்கு நிலைகொண்டது. பிறகு 1987 இல் இந்திய இராணுவமும் மீண்டும் 1990 இல் இருந்து இலங்கைப் படையினரும் நவீன முறையில் இராணுவத் தளத்தை இங்கே உருவாக்கின.

1990, 91 இல் இந்தத் தளத்தை அழிப்பதற்காக விடுதலைப் புலிகள் பெரும் முயற்சி எடுத் தனர். 1991 இல் ஆகாய கடல் வெளிச்சமர் என்ற முதலாவது மரபு வழிப்படை நடவடிக்கை இங்கே புலிகளால் முன்னெடுக்கப்பட்டது. 18 நாட்கள் தொடர்ச்சியாக நடந்த சமரின் இறுதியில் புலிகளின் முயற்சி பின்னடைவைச் சந்தித்தது. இந்தச் சமரில் 678 போராளிகள் சாவடைந்திருந்தனர். குறிப்பாக இந்த முகாமைக் கைப்பற்றும் முயற்சியில் புலிகள் தாங்களாகவே தயாரித்த கனரக வண்டிகளை - ராங்கிகளைப் பயன்படுத்தினர். அதில் ஒன்றை பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலராக இருந்த மேஜர்கேசரி செலுத்திச் சென்றார். இந்த வண்டி இலக்கை அடைந்திருக்குமானால், முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்திருக்கும். அதற்குள் இந்த அபாயத்தை அறிந்த ஒரு படைச்சிப்பாய், வெடிகுண்டோடு வண்டிக்குள் பாய்ந்து இதைச் செயலிழக்க வைத்தார். விளைவாக முகாம் படையினரால் காப்பாற்றப்பட்டது.

இதன்போது ஆனையிறவு உப்பளம் முழுமையாக மூடப்பட்டது. 2000 வரையான தொழிலாளர்கள் வேலை செய்த, இலங்கையின் மிகச் சிறந்த உப்பளமாக இருந்த ஆனையிறவு - குறிஞ் சாத்தீவு உப்பளங்கள் படைத்தளங்களாகின. தொழிலாளர்கள் அகதிகளாகினர். அகதிகள் இடம் பெயர்ந்து எங்கெல்லாமோ சிதைந்து போயினர். உப்பு மால்கள் மழையில் கரைந்து கடலில் சேர்ந்தன.

ஆனாலும் புலிகள் ஓயவேயில்லை. பிறகு 2000 ஆம் ஆண்டு பத்தாயிரம் படையினரைக் கொண்ட இந்தத் தளத்தைக் கைப்பற்றி ஆட்லறிகள் உட்பட பல கனரக ஆயுதங்களைப் புலிகள் எடுத்தனர். புலிகளின் புகழ்பெற்ற குடாரப்புத்தரையிறக்கம் இதற்காகவே நடந்தது. வெற்றிக்குப் பிறகு 1991 இல் கேசரியால் ஓட்டிச் செல்லப்பட்ட ராங்கி புலிகளின் நினைவுச் சின்னமாக ஆனையிறவின் தென்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டது. படை முகாம், சோதனைச்சாவடி எல்லாம் அகற்றப்பட்டு ஆனையிறவு பெரும் வெளியானது.

2009 இற்குப் பிறகு கதை மாறியது. இந்தப் படைத்தளத்தில் ஒரு பிரமாண்டமான வெற்றிச் சின்னத்தை இலங்கை அரசு நிர்மாணித்தது.



கேசரியால் ஓட்டிச்செல்லப்பட்ட ராங்கியின் உள்ளே குண்டினை வெடிக்கவைத்துச் சாவடைந்த லெப்ரினன்ட் காமினி என்ற சிங்களச் சிப்பாயின் நினைவுச்சின்னமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்ப்பதற்காக தினம் ஏராளமான தென்னிலங்கை வாசிகள் வந்து கூடுகிறார்கள். வெளிநாட்டுக்காரர்களும் வருகிறார்கள். எல்லோரும் தாராளமாகப் படங்களை எடுக்கிறார்கள். எதையெல்லாமே பேசுகிறார்கள்.

இப்படி வருகின்றவர்களுக்கு ஆனையிறவில் உப்பளம் இருந்ததாகத் தெரிவதில்லை. அது சிதைக்கப்பட்டதோ இன்னும் மீள் நிலைப்படுத்தப்படாமல் இருப்பதோ தெரியாது. அதில் அவர்களுக்கு அக்கறையுமில்லை. நாட்டின் தேசிய உற்பத்திக்கு வளம் சேர்த்த ஒரு தொழில் மையத்தை இழந்ததைப்பற்றி யாருக்குத்தான் கவலை?

ஆனையிறவில் சனங்கள் குடியிருந்ததைப் பற்றியும் நினைவில்லை. அங்கிருந்தவர்கள் எல்லாம் பிறகு எங்கே போனார்கள்? என்ன ஆனார்கள்? இப்பொழுது எங்கே இருக்கிறார்கள்? மீண்டும் அவர்கள் இங்கே வர முடியுமா? இன்னும் அவர்கள் இங்கே வரமுடியாமலிருப்பது ஏன் என எதைப்பற்றியும் தெரியாது. இதற்காகவெல்லாம் அவர்கள் கவலைப்படப்போவதுமில்லை.

ஆனால், அங்கே ஒரு பிரமாண்டமான புகையிரத நிலையம் கட்டப்பட்டுள்ளது. ஆட்களில்லாத இடத்திற்கு இத்தனை பெரிய புகைவண்டித்தரிப்பிடம் எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம். உங்கள் கேள்விக்குப் பதில் இல்லை.

வலசைப்பறவைகள் வந்து போகின்றன. களப்பும் ஒவ்வொரு கோடையிலும் வற்றி மாரியில் பெருக்கெடுக்கும். ஒன்றிரண்டு மீனவர்கள் அங்குமிங்குமாக களப்பில் மீன்பிடிக்கிறார்கள். கடற்காகங்கள் கடலுக்கு மேலும் நம் தலைக்கு மேலும் பறக்கின்றன.

உப்பு வயல்கள் தூர்ந்து போகின்றன.

03

ஏனோ தெரியவில்லை.
ஆனையிறவைக் கடக்கும்
போதெல்லாம் எனக்கு -

"ஆனையிறவு உப்பளத்தில்
உப்புக்குவியல்கள்
பளிங்குக் குன்றுகள்
சரித்திரம் காணாத
சாவிளைச்சல் சாவிளைச்சல்....
ஐயோ வாடி வீடே
நீ
வதைகூடம் ஆனாயே..
விடுதியென இனி உன்னை யார் நம்பி
வருவார்கள்?
கதறல் அலறல் எல்லாம்
காற்றில் பதிந்து கடல் கடந்து கேட்கிறது"

- என்ற தா. இராமலிங்கத்தின் கவிதையே நினைவில் வருகிறது ■

# ஆவுரஞ்சிக்கல்

ஆவுரஞ்சிக்கல் தமிழர் மரபுசார் பண்பாட்டு இருப்புக்களில் முக்கியமானது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர்சார் பிராந்தியங்களில் இன்று பல இடங்களில் அச்சுறுத்தலுக்கும் அழிவுக்கும் உள்ளாகிவருகின்றது, இளம் தலைமுறையினர் தமது முன்னோர்கள் சகஜீவன்கள் மீது காட்டிய அளப்பெரும் அன்பையும் கருணையையும் அறிந்திராதவராய் இருக்கின்றார்கள்.

ஆவுரஞ்சிக்கல் என்ற இவ்வகை பொழியப்பட்ட கல்லை நீங்கள் எல்லோரும் கிராமங்களில் கேணிகள், கிணறுகள், நீர்த்தொட்டிகள் உள்ளிட்ட நீர் நிலைகளுக்கு அருகில் கண்டிருப்பீர்கள். கால்நடைகளான மாடு, ஆடுகள் நீர் அருந்த அமைக்கப்பட்ட இடங்களில் இந்தக்கல் எதற்கு? என்ற கேள்வி உங்களிடம் எழலாம்.

இயற்கையாகவே மிருகங்கள் உணவுண்டு நீர் அருந்திதாகம் தீர்த்தவுடன் அவற்றிற்கு உடலில் ஒரு வகை தினவு எடுக்கும். அத்தினவை தீர்க்க மரங்கள் பாறைகளில் உடலைத்தேய்க்கும். அப்படி கால் நடைகள் தமது உடல் தினவைப் போக்குவதற்காக நம்முடைய முன்னோர்கள் அமைத்த கல்தான் இந்த ஆவுரஞ்சிக்கல். எம்முடைய சமூகத்தின் வாழ்வு முறையின் ஒரு பகுதியையும் பலகதைகளையும் தாங்கிநிற்கும் ஆவுரஞ்சிக்கல் பாதுகாக்கப்பட வேண்டிய மரபுச்சொத்தாகும்.



## மரபுரிமைப்போட்டி 01

உங்களுக்குத் தெரிந்த ஆவுரஞ்சிக் கற்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்.
அதிகமான ஆவுரஞ்சிக்கற்கள் இருக்கும் இடங்களை ஆதாரத்துடன்
அனுப்பி வைப்பவர்களுக்கு ரூ. 1000.00 பரிசாக வழங்கப்படும்.
முடிவுத் திகதி - 28.06.2016

அனுப்பவேண்டிய முகவரி: புதுவிதி, 107, இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

---

# தொன்ம யாத்திரை

நடத்தல் - அறிதல் - கொண்டாடுதல்

மரபின் அழிப்பென்பது ஓர் இனத்து இருப்பின் அழிப்பு வரலாற்றின் அழிப்பு, அதனை மீட்பதென்பது அதன் சந்ததிகளின் கடமை. சொற்ப அளவிலான நிலங்களும், மரங்களும், குளங்களும், ஏரிகளும், கட்டடங்களும் தமக்கென்ற வரலாற்றுக் காலகட்ட சாட்சியமாக நம்மிடம் எஞ்சி நிற்கின்றன. பண்பாட்டு உற்பத்திகள் கைவினைகள் வழக்குகள், நடைமுறைகள், ஆற்றுகைகள் போன்ற சக அசைவியக்கங்களின் பேறுகளை நாம் அடையாளம் காணுதல் நமது காலகட்டத்தின் தேவையாகும்.

பெரும்பான்மை இனத்தின் புதிய அடையாள உருவாக்கங்கள் நிகழும் இக்கால கட்டத்தில் நமது தொன்மையை அறிதலும் கொண்டாடுதலும் நம்மிடம் இருக்கும் ஓர் எதிர்ப்பு நடவடிக்கை. இந்த அடிப்படையில் நமது தொன்மங்களை புழக்கத்திற்குரிய கொண்டாட்டத்திற்குரிய இடங்களாக மாற்றுவதற்கான ஒரு முன்னெடுப்பே "தொன்ம யாத்திரை".




விதை குழுமம், அக்கினிச்சிறகுகள், ஜப்னா டுடே முதலான அமைப்புகள் இணைந்து இச் செயற்பாட்டு அசைவினை தொடர்ச்சியாக மேற்கொள்ள ஆரம்பித்துள் ளன. ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு மரபுரிமை சார்ந்து அதிகம் கவனத்தில் கொள்ளப்படாமல்அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும்மரபுரிமைசார் இடங்கள், பொருட்கள் என்பவற்றை தெரிவுசெய்து அவற்றை நோக்கி சென் று அணியாகி அவற்றை பற்றிய கதைகளை கேட்டு அறிந்தும் அவற்றை முறையான விதத்தில் ஆவணப்படுத்தியும் கொண்டாட்டங்களின் ஊடான மீள் ஞாபக மூட்டலையும் மேற்கொள்கின்றனர்.

குறித்த யாத்திரை இதுவரை இரண்டு மரபுரிமை சார்ந்த இடங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது, பருத்தித்துறையில் காணப்படும் இலங்கையின் மடப்பண்பாட்டில் உள்ள இறுதி மரபுரிமைப் பொருளான தெருமூடி மடத்தை நோக்கி முதலாவது யாத்திரை அமைந்தது. அதனைத்தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள இயற்கை மரபுரிமை சார்ந்த பகுதியான சரசாலை கிராமத்தில் உள்ள குருவிக்காட்டில் யாத்திரை மேற்கொண்டிருக்கின்றார்கள்.


எழுத்து செயற்பாட்டில் இருப்பவர்கள், கலைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று பல மட்டத்தினரும் இந்த யாத்திரை நிகழ்வில் பங்கேற்கின்றனர். பாரம்பரிய இசை முதலான கலை வடிவங்களை ஞாபகமூட்டுதல், பாரம்பரிய உணவுகளை பகிர்தல் முதலான உப செயற்பாடுகளும் இந்த யாத்திரைக்குள் உள்ளடங்குகின்றன.




க.சிவனுசன்

## வீரசிங்கம் நினைவு முத்திரை :

# கருக்கொண்ட பொழுதுகள்




கூட்டுறவுத் தந்தை அமரர் வீரசிங்கம் நினைவாகத் தபால் தலை வெளியீட்டு வைபவம் ஒன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 02-05-16 மாலை நடைபெற்றது. அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களின் அயரா முயற்சியில் இது சாத்தியமானது. முத்திரைக்கான (Portrait) ஓவியத்தை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க நான் ஏற்றுக் கொண்டேன். ஆயினும் தரமான புகைப்படம் கிடைப்பதில் சிரமப்பட வேண்டியிருந்தது. கிடைத்ததை வைத்து வரையவேண்டிய சூழ்நிலை. கருமையான உடலமைப்பைக் கொண்டவர் வீரசிங்கம். அவருடைய நிறத்தை ஓவியத்தில் கொண்டு வருவது அவ்வளவு இலகுவானதல்ல என்பதை அறிவேன். எண்ணெய் வர்ணத்தில் வரைவதாயின் இலகுவாக இருக்கும். ஆனால் (oil pastel) ல் வரைவதாயின் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். என்னுடைய மானசீகக் குருவான காலஞ்சென்ற A.C.G.S.Amarasegara அவர்களால் எண்ணெய் வர்ணத்தில் வரையப்பட்ட வீரசிங்கம் அவர்களின் ஓவியம் ஒன்று நீண்ட காலமாக வீரசிங்கம் மண்டபத்தை அலங்கரித்திருந்ததை நான் அறிவேன். ஆனால் அது யாரோ விஷமிகளால் சேதமாக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டது வரலாறு. ஆயினும் முதலியாரின் அந்த ஓவியம் இன்றும் என் கண் முன்னே நிழலாடுகிறது. முதலியாரின் அந்த தரத்தை நான் வரையும் ஓவியத்தில் கொண்டுவரடியுமா? என்ற பயம் என்னை ஆட்கொள்வதைத் தவிர்க்க முடியவில்லை. ஓவியத்தை வரைந்து முடிக்கும் வரை முதலியார் என்னுடனேயே இருந்தார் என்றே கூறவேண்டும். ஏனெனில் அவர் முழுமையாக என்னை ஆட்கொண்டிருந்தார் என்பது தான் உண்மை. முத்திரைப் பணியகத்திலிருந்து இந்த விழாவுக்கு வருகை தந்திருந்த ஒரு சிங்கள அன்பர் என்னை வாழ்த்தியதும், முதல்நாள் உறைகளில் எனது கையெழுத்தை வாங்கிச் சென்றதும் எனது பெறுமதியை உணர்த்தி நின்றன.



எல்லாவற்றுக்கும் மேலாக விழா மேடையில், மாண்புமிகு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்களால் நான் கௌரவிக்கப்பட்டதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் காரணகர்த்தாவான அமைச்சர் ஐங்கரநேசன் அவர்களுக்கே இப் பெருமையெல்லாம் சேரட்டும்.

■ ஆசை இராசையா

இப்பொழுது யாழ்ப்பாணம் மஜஸ்ரிக் திரையில்...




# பெண் போராளிகளின் தடுப்பு முகாம் வாழ்வு

## நூல் வெளியீடு



முன்னாள் பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்வு தொடர்பான வரலாற்றுப் பதிவான "ஆறிப்போன காயங்களின் வலி என்ற நூல் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்படவிருக்கின்றது.

போரில் விழுப்புண் அடைந்து ஒரு கண்ணையும், ஒரு கரத்தையும் இழந்த பெண் போராளியான வெற்றிச் செல்வியின் பட்டறிவுப் பகிர்வாக மலரும் இந்த நூலின் வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஆசிரியை தனலெட்சுமி கிறிஸ்துராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் போராளி மருத்துவர் திருமதி தனேஸ்குமார் சத்தியபாமா சிறப்பு விருந்தினராகவும், சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

வெளியீட்டுரையை தீபச்செல்வனும் மதிப்பீட்டுரையை கோகிலவாணியும் (சுகன்ஜா) வழங்க, ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் வெற்றிச் செல்வி வழங்குவார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 18.06.2016 அன்று
107, இராசவீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.